146

சுதேசமித்திர

28—9—47

OFFICE OF THE REGISTRAR OF ...
1 OCT 1947
MADRAS

SL
m211, N30s
N47.18.35
199480

SWADESAMITRAN ILLUSTRATED WEE

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
:: நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW111-111 W. WOODWARD LTD. LONDON. ENGLAND

ழுகும் ராஜகளையும் பொருந்தியவர். குருகுலவாசம் செய்யும்போது பலவித சில்லரை வேலைகள் குருவுக்குச் செய்ய வேண்டியதாயிற்று. அப்படியே குரு பத்னிக்கும் செய்யவேண்டி நேரிட்டது.

ஒருநாள் அந்தி மயங்கும் வேளை; இதே வஸந்தகாலம் சித்ரா பௌர்ணமி தினம்தான்.

நதியில் ஸ்னானம் செய்துவிட்டு, வீட்டிற்குத் திரும்ப புறப்பட்டாள் குருபத்னி ரோகிணி அம்மை எதிரே வந்துகொண்டிருந்தான் சிஷ்யன் மாதவன். சந்தியா தேவியின் சமூகத்தின் முன்னிலையில், மாதவனும், ரோகிணியும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர்.

ஒரே க்ஷணத்தில் பரிமாறிக் கொண்ட அக்கண்ணோட்டம் இருவர் உள்ளத்தையும் ஒன்றாக இணைத்துவிட்டது. தமது நிலைமை, தாம் யார் என்பதையே அடியோடு மறந்துவிட்டனர்.

நதியின் மரங்களில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த மைனாபுட்களினுடைய இனிமையான குரல் அவர்கள் உள்ளங்களை அலைக்கழித்தது. எங்கிருந்தோ கூவிக்கொண்டிருந்த குயிலின் மதுரத்வனி, அவ்விருவர் உள்ளத்தில் பாய்ந்து உணர்ச்சி வெள்ளத்தைப் பெருக விட்டன.

இளமையின் இயற்கை, பூம்பொழிலின் மனோகரமான வாசனை, மந்தார வேளையின் மதிமயக்கம், எல்லாம் சேர்ந்து அவர்களின் சித்தன உறுதியை குலைத்து விட்டன.

சொல்ல முடியாத, வெளியிட முடியாத அத்துக்கத்தினால் இருவருடைய உள்ளமும், உருகித் துடித்தன.

அவர்கள் காணும் ஒவ்வொரு வஸ்துவிலும், இன்ப மயக்கம் நிறைந்திருப்பதாக உணர்ச்சியடைந்தார்கள்.

குடம் கீழே விழுந்தது. மாதவனின் கையிலுள்ள தர்ப்பை சமித்துகளும் நழுவிப்போயின.

இருவரும் மெய்மறந்த நிலையில் மேலே மேலே விண்ணுலகத்திற்கும் அப்பாலுள்ள சுகத்தை தங்களிடமே கண்டுவிட்டனர்

வெள்ளி மறைந்து போனான். மதியும் வானைப் பிளந்துகொண்டு நீலத்திரையில் மிதந்து வந்துவிட்டான்.

நதிக்குச் சென்ற தன் பத்தினி வீட்டிற்குத் திரும்பவில்லையே ஒருகால், பூச்சிபொட்டு கடித்துவிட்டிருக்குமோ என்ற சந்தேகம் தாக்கியது குருநாதரை.

கையில் நீண்ட தடியுடன் நதிக்கரையை அனுகினார் குருநாதர். பிடிக்கட்டில் ஏதோ இரண்டு உருவங்கள் பிணைக்கப்பட்டிருந்தன. அருகில் சென்று தடியால் தட்டினார். சுக உலகத்திலின்று துக்க உலகில் உருண்டு விழித்துக் கொண்டனர் விதியின் வாயில் அகப்பட்ட அத்தேரைகள்.

"அடே குருத்ரோஹி! எத்தனை நாட்களாய் இந்தக் கபடநாடகம்! பதிதே! உன் பெயரைச் சொல்லக்கூட இந்த நாக்கு யோக்யதையில்லாமற் செய்துவிட்டாய் இனி! உலகில் எத்தனையோ கஷ்டங்களையடைந்து முடிவில் உன்னால் நிம்மதியடைந்து ஊருக்கு வெளியே, இந்தக் குடிசையே ராஜபோகமாய் எண்ணி வாழ்வை கடத்தினேன். என் நிம்மதி, என் வாழ்வு எல்லாம் இன்று உங்களிடையே பொசுங்கி நீறுகி விட்டன. சண்டாளா! உன் வீணையின் மகாத்மியம் உன்னை இந்த முடிவில், இந்தக்கதிக்கா ஆளாக்கிவைத்தது?

இளமுறுக்கு நிறைந்த உன் கைகள் முரடான வீணையைத் தழுவி அலுத்துப்போய்விட்டதோ! என் உள்ளத்தின் ஆத்ம வீணையையே நீ சின்னாபின்னமாக்கி விட்டாய். உன் வீணை வித்தை அழிந்து போகட்டும்! உன் வம்சமே வீணையின் நாதத்தையே கேட்கக்கூட அருகமில்லாமற்போகட்டும்! யார் ஒருவர் இந்த சித்ரா பௌர்ணமியில் இங்க வீணையின் நாதத்தைக் கேட்பாரோ, அவர்கள்கூட இந்த கதியைத்தான் அடைவார்கள். வீணையின் நாதம் கேட்டால் அவர்கள் உயிர் வீணையின் நரம்புகள் அறுபட்டு போகக்கடவது என்று ஆத்திரம் மிகுந்து சாபமிட்டுத் திரும்பிப் போய்விட்டார்.

அதன் பிறகு என் தகப்பனார் சில காலம்தான் உயிரோடிருந்தாராம். இந்தத் துயரமே அவரைக் கொன்றுவிட்டதாம். எங்கள் வம்சத்தில் நான் ஒரே புத்திரன். எனக்கு இவள் ஒரே பெண். இந்த சாப விஷயத்தை என் தாயார் என்னிடம் சொல்லி எச்சரித்திருக்கிருள். ஆனால் எனக்கு அந்த மாதிரி சாபம் என்பதில் நம்பிக்கை கிடையாது.

நாங்கள் சங்கீத பரம்பரையில் பிறந்தும்கூட இந்த வீணையின் நாதம் மட்டும் எங்கட்கு விதிவிலக்காகவேதான் போய்விட்டது. மகாபாவி நான் உனக்கோ, அவனுக்கோ இந்த விஷயத்தைச் சொல்லி எச்சரிக்காமற் போய்விட்டேன் என்று வருந்தினார் என் மாமனார்.

அவ்வளவுதான். வேறு என்ன சொல்வது யோகம்! இந்தக் கதைதான் என் உள்ளத்தை மறைத்திருக்கும் திரை. என் வாழ்க்கையில் நான் கட்டிய முதல் கட்டிடம் இடிந்துபோய் விட்டது. இப்படி ஒரு சாபம் ஏற்பட்டிருக்கும், அது பலிக்கக் கூடும் என்ற விஷயம் எனக்குத் தெரியவுமில்லை, தெரிந்திருந்தால்கூட அப்போதிருந்த காதல் வெறியில் இளமுறுக்கில் இந்த அர்த்தமற்ற சொல்லை நம்பியும் இருக்கமாட்டேன்.

அவளோடு அந்தக்காதல் என்னும் பதத்திற்கே உயர்வு இல்லாமற் போய்விட்டது என் உள்ளத்தில். காதல் என்பது ஒரு நீர்க்குமிழிபோல்தான் தோன்றுகிறது இந்த சமயத்தில்.

ஒண்டி மரமாக என் வாழ்வை நடத்த முடியவில்லை. ஏகாந்தம் என்னைத் தின்றுவிடும்போலிருந்தது. துணை தேடிற்று. அதை ஒட்டித்தான் உன்னை மணந்து கொண்டேன். இதில் ஏதும் பிழையுண்டா சொல் யோகம்.

"பிரபு! என் மட்டில் காதல் என்பது ஒரு பொற்பூச்சு என்றுதான் நினைக்கிறேன். நான் உங்களை இப்போது காதலித்தா மணந்தேன்? நமது விவாகத்திற்குப் பின்பு நாம் ஒன்றாய் இணைக்கப்பட்ட பின்பு ஏற்பட்ட அன்புக்கு நான் அடிமையாயிருக்கிறேன். கடமைக்குட்பட்டுஏற்பட்ட காதல் என்று இதைச் சொல்லலாம் இல்லையா."

"ஆம். உன் மனதைப்போலவே என் மனதிலும் கடமைப்படுத்தப்பட்ட அன்பு தேங்கித்தான் இருக்கிறது. ஆனால் அதை காதல் என்று எப்படிச்சொல்ல முடியும்! நான் ரஸம் பிழியப்பட்ட ஒரு பழம் கசக்கி முகரப்பட்ட மலர். என்னுள் ஒரு காலத்தில் சுரந்திருந்த காதல் ஊற்றுக் கண் இப்போது வற்றிப்போய்விட்டது. நீயோ ஒரு புத்தம் புதிய மலர்.

இவ்வாறு முறை என் உள்ளத்தில் காதல் என்னும் புதிய ஊற்று நீர் சுரக்காது என்றுதான் தோன்றுகிறது.

நீ என்மேல் கொட்டியிருக்கும் அளவுக்கு மீறிய பதிலுக்கு பதில் என்னால் திருப்பிக் கொடுக்க முடியாத அன்பை, என் ஹிருதயம் ஆழத்திலிருந்து தோண்டி எடுக்க முயற்சிக்கிறேன். ஆனால் அது முற்றும் முடிந்த காரியமாயில்லை. அதை எண்ணித்தான் என் உள்ளம் புழுங்குகிறது. ஒரே ஏகாக்ர சித்தத்துடன் அன்பை அள்ளிச் சொரிந்து நிற்கும் உன் முன்பாக என் நிலையை எடுத்துக்கூற வெட்கிறேன். இன்று எப்படியோ நீ என் உள்ளத்தை திறந்துவிட்டாய்.

இத்தனை நாட்களாய் நீங்கள் போட்டுக்கொண்டிருந்த திரையை இன்று நீங்களே விலக்கினீர்கள். உங்கள் ஹிருதயத்தில் ஏதோ ஒரு சோக சம்பவத்தின் சாயல் படிந்துதான் இருக்க வேண்டும் என்று நான் எண்ணியதுண்டு. இன்று அத்திரை விலகிவிட்டது. இனி என்னால் ஆனவரை உங்களைக் களிப்பித்து உற்சாகமூட்ட முயல்வேன். காதலை இழந்து கலங்கி நிற்கும் உங்களின் உலர்ந்துபோன உள்ளத்தைப் பசுமையாக்கி உங்கள் ஹிருதயமலரை மலரச் செய்வது என் தவிர்க்க முடியாத கடமை.

பிரபு! என் அன்புக்குச் சமமான அன்பை பரிவர்த்தனை செய்ய முடியவில்லையே என் உள்ளம் புழுங்கவேண்டாம். என் உள்ளம் உங்கள் பரிவர்த்தனையை எதிர்பார்க்கவில்லை. பிரதி பலன் கருதாத ஒரு தனிப்பட்ட அன்பு என் உள்ளத்தில் ஊற்றாய் பதிந்து கிடக்கிறது. இதோ உச்சியில் மிதக்கும் சந்திரனைப் பாருங்கள்! பிரதிபலன் கருதாமல் பூமிக்கு எப்படி தன் இயற்கையால் வெளிச்சமும் குளிர்ச்சியும் கொடுத்துக் கொண்டிருக்கிறதோ, அதுபோல என் உள்ளத்தில் ஒளிரும் அன்பின் ஜோதி, உங்கள் வாழ்க்கைக்கு நீங்கள் எப்படி இருந்தாலுங்கூட வெளிச்சம் தந்து கொண்டிருக்கும் இது பெண்மைக்கே இயற்கை" என்றாள் யோகம்.

யாழ் அரங்கேற்று விழா

திருக்கொள்ளம்பூதூரில் சென்ற 4, 5, 6-ந்தேதிகளன்று யாழ்நூல் அரங்கேற்று விழா நடந்தபோது எடுத்த படம். இதை விபுலானந்தர் நடத்திவைத்தார். பிரபல தமிழ் பண்டிதர்கள் வந்திருந்தனர். கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசலிங்கம் இதில் பிரசன்னமாகியிருந்து பேசினர்.

தகுந்த வெகுமதி

—கோமதி ஸ்வாமிநாதன்—

★

பாத்திரங்கள்:—

நாராயணய்யர். லக்ஷ்மி. வெங்கிட்டு.

[ஞாயிற்றுக்கிழமை. நாராயணய்யர் மார்க்கெட்டிலிருந்து திரும்பி வந்து காய்கறிப் பையை அப்படியே கீழே கவிழ்த்து விட்டு சிரமபரிகாரம் செய்து கொள்வதற்காக உட்காருகிறார். அவர் மனைவி லக்ஷ்மி உள்ளிருந்து வருகிறாள்.]

லக்ஷ்மி:—அடாடா! இன்றைக்கும் இந்த பாழாய்ப் போன வெண்டைக்காயைத்தானா வாங்கி வந்தீர்கள்?

நாராயணய்யர்:—[ஞாபகப் பிசகாய்] என்ன எதிர்த்துப் பேசுகிறாய்? இனி மேல் பேசவில்லை என்று நூறு தடவை 'இம்போசிஷன்' எழுதிக் கொண்டுவா.

லக்ஷ்மி:—உங்களுக்கு என்றைக்கு வீட்டு ஞாபகம் வந்து ஒழுங்காக இருக்கப் போகிறீர்களோ அன்றுதான் குடித்தனம் உருப்படப் போகிறது! நல்ல வேளை! இந்த மட்டில் பிரம்பைத் தூக்கி அடிக்காமல் விட்டீர்களே! ஒரே அடியாய் வெண்டைக்காயை சாப்பிட்டு மூளை வழவழத்துப் போய் விட்டது!

நாராயணய்யர்:—[விழித்துக் கொண்டவராய்] ஏய்! மடசாம்பிராணி! வெண்டைக்காயிலே 'பாஸ் பரஸ்' இருக்கு! அதனாலே மூளை ரொம்பக் கூர்மை ஆகும். மார்க்கெட்டிலே வேறெந்த காய்கறி வகைகளை வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறான்? இந்த வெண்டைக்காயாவது கிடைக்கிறதே.

லக்ஷ்மி:—'பாஸ் பரஸ்' பத்திக் கொண்டுதான் எரியும். உடன் உடத்தவர்கள் விதவிதமாய் கறிகாய்கள் வாங்கிக் கொண்டு வரவில்லையா?

வெங்கிட்டு:—அம்மா! அம்மா! அந்த ரகசியம் எனக்கன்றோ தெரியும். அந்த வெண்டைக்காய்க் கடைக்காரன் ஒருவன்தான் அப்பாவை நம்பி காய்கறிகள் கடனாகத் தருகிறான். மற்றவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள்.

லக்ஷ்மி:—பேஷ்! பேஷ்! அவனும் நாளைக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டால், அப்புறம் வாயு பக்ஷணந்தான். பால்காரன் காலையிலேயே சத்தம் போட்டு விட்டுப் போயிருக்கிறான். இன்னும் கொஞ்ச நாழிகை கழித்து நக்ஷத்திரேயன் மாதிரி மளிகைக் கடைக்காரன் பாக்கி வசூலிக்க வந்து நிற்பான். நல்ல பிழைப்பு. என்றைக்குத்தான் நமக்குக் கதிமோக்ஷம் வரப்போகிறதோ?

நாராயணய்யர்:—அதெல்லாம் கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்! நமக்கென்ன கவலை?

லக்ஷ்மி:—இப்போது என்னவோ சிரத்தையாக, கூரையைப்பிய்த்துக் கொண்டு தெய்வம், மழையையும் வெய்யிலையும் தான் கொடுக்கிறது. வேறு ஒன்றையும் காணோம். நீங்கள் இப்படி நிம்மதியாக இருப்பதற்கு, உங்களுக்குப் பெண்டாட்டி எதற்கு? பிள்ளை எதற்கு? சன்யாசம் வாங்கிக்கொண்டுபோய் விடுவதுதானே!

நாராயணய்யர்:—நான் சந்யாசம் வாங்கிக்கொண்டு போய்விட்டால் உனக்கு இந்த வெண்டைக்காய் கூடக்கிடைக்காது. தெரியுமா? பேசாமலிரு. அதிருஷ்டம் தன்னாலே வரும்!

[வாசற் கதவு தட்டப்படும் சப்தம் கேட்கிறது. நாராயணய்யர் போய் கதவை திறக்கிறார். கல்யாணத்திற்கு அழைப்பதுபோல் கையில் குங்குமச் சொப்புடன் காக்ஷியளிக்கிறார் ஒருவர்.]

நாராயணய்யர்:—வாருங்கள்! வாருங்கள்!

வந்தவர்:—ஜில்லா விவசாய ஆபீசர் ஜம்புசாமி இருக்கார் தெரியுமோல்லியோ! அவர் பையனுக்கு இன்றைக்கு அக்ஷராப்யாசம்! பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்போகிறார்கள். நீங்கள் அவசியம் வந்திருந்து விசேஷத்தை சிறப்பித்துத்தரவேண்டியது. ஜம்புசாமி, உங்ககிட்டே ஸ்பெஷலாய் வற்புறுத்திச் சொல்லச்சொன்னார்.

நாராயணய்யர்:—ஆகா! அவசியம் வருகிறேன்!

[வந்தவர் போகிறார்.]

லக்ஷ்மி—வந்தவர் சொல்லியதைக் கவனித்தீர்களா?

நாராயணய்யர்.—எதை?

லக்ஷ்மி:—அதுதானா! ஜம்புசாமி உங்களை வற்புறுத்தி அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் என்று வந்தவர் சொன்னாரல்லவா?

நாராயணய்யர்:—அதற்கென்ன?

லக்ஷ்மி:—ஐயோடி! உங்களைப்போலே அசட்டுப் பிராமணன் யாரு இருப்பா? இதெல்லாம் ஊகித்துத் தெரிந்துகொள்ள வேண்டாமா? பெரிய மனுஷாள் வீட்டிலே, உங்களை மெனக்கெட்டு கூப்பிட்டார்கள் என்றால், எதையாவது மனதில் வைத்துக்கொண்டுதானே கூப்பிட்டிருப்பார்கள்!

நாராயணய்யர்:—ஆமாம்! இப்போதுதான் புரிகிறது! அந்தப் பையனுக்கு என்னையே டியூஷன் சொல்லித் தருவதற்கு அமர்த்துவார்கள்போலிருக்கிறது. நல்ல 'சான்ஸ்' தான்.

லக்ஷ்மி:—அப்பாடா! இதைத் தெரிந்துகொள்ள இவ்வளவு நேரம் பிடித்ததாக்கும். கிளம்புங்கோ! அந்த ஜரிகை அங்கவஸ்திரத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு டக்காகப் போய்விட்டு வாங்கோ.

நாராயணய்யர்:—அந்த அங்கவஸ்திரம் முழுக் கிழிசலல்லவா?

லக்ஷ்மி:—விசிறி மடிப்பு அங்கவஸ்திரம் வேறு எப்படி இருக்குமாம்? கிழிசல் தெரியாமல்தான் மடிக்கப்பட்டிருக்கிறதே! கொஞ்சம் முன்னாலேயே போய், அவாத்து மனுஷ்யாளோடே கலந்துகொண்டு, அவர்களில் ஒருவராக, வருபவர்களை உபசாரம் பண்ணி, சந்தன தாம்பூலம் கொடுத்து சபையிலே பிரதான மனுஷராய் காண்பித்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் ஜம்புசாமிக்கும், அவர்கள் வீட்டாருக்கும் உங்கள் மேலே பிரியம் விழும். டியூஷன் வைத்துக்கொண்டாலும் மாதம் இருபது ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். அது நமக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கும்!

நாராயணய்யர்:—நான்தான் அப்பவே சொன்னேனே! கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும் என்று. இப்போது கூப்பிட்டுக் கொடுக்கப்போகிறது மாதம் இருபது ரூபாய் என்றால், இந்த பால்காரன் கடனை ஒரே மாதத்தில் தீர்த்துவிடலாம். அடுத்த மாதம் மளிகைக் கடைக்காரன் மூஞ்சியிலே தூக்கி எறிந்துவிடலாம். அப்புறம் அந்தப் பணத்தை அப்படியே மாதா மாதம் சேவிங்ஸ் பாங்கில் போட்டு வைத்தோமானால், சௌகரியமாக இருக்கும்.

லக்ஷ்மி:—ஆத்துக்கு வேண்டிய துணிமணிகளை வாங்கிக்கொண்டு அப்புறம்சேர்த்து வைக்கிறதைப் பற்றி யோசிக்கலாம். இந்தக் கைவளையலைக் கூட அழித்து புது மோஸ்தரில் செய்து கொள்ள வேண்டும்.

நாராயணய்யர்: பணம் கிடைக்கட்டும். ஆனைக் கூட அழித்துப் பண்ணிக் கொள்ளலாம். நான் போய் விட்டு வரட்டுமா.

(போகிறார்)



[சில மணி நேரத்துக்குப் பிறகு, தலையில் பெரிய சாக்கு மூட்டையுடன் ஒரு ஆள் பின் தொடர நாராயணய்யர் வீட்டிற்குள் நுழைகிறார்.]

நாராயணய்யர்:—வெங்கிட்டு! வெங்கிட்டு! இந்த மூட்டையை இறக்கி உள்ளே கொண்டு வைடா!

(லக்ஷ்மி உள்ளிருந்து வருகிறாள்)

லக்ஷ்மி:—வாங்கோ! வாங்கோ! போன காரியம் பழம்தானே! டியூஷனுக்கு ஏற்பாடு பண்ணத்தானே கூப்பிட்டார்கள். இருபதுரூபாயா? இருபத்தி ஐந்து ரூபாயா? ஒப்புக்கொண்டுவிட்டீர்களல்லவா?

நாராயணய்யர்:—அவ்வளவுதானே! கேள்விகள் முடிந்ததா? பாலகாண்டத்திலேயிருந்து, ராவணன் பிராணனைவிடும்காண்டம்வரை உன் ராமாயணத்தை ஒரே மூச்சில் முடித்துவிட்டாயல்லவா? அப்படி என்ன அவசரம் பாழாப் போகிறது?

லக்ஷ்மி:—உங்கள் முகத்தைப்பார்த்தால் அவ்வளவு உற்சாகமாக இருப்பதாகத் தெரியவில்லையே! இப்படி அலுப்புடன் பேசுகிறீர்களே! பத்து ரூபாய்க்கு மேலே கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்களோ?

நாராயணய்யர்:—ஜம்புசாமியை வேறு ஊருக்கு மாற்றியாய்விட்டதாம். ஆர்டர் வந்து ஒரு வாரமாய் விட்டதாம்.

லக்ஷ்மி:—அதென்ன கூத்து? நம்முடைய ஆகாசக் கோட்டையின் அஸ்திவாரமே ஆடுகிறாப்போலிருக்கிறதே! பிறகு எதற்காக உங்களை வற்புறுத்திக் கூப்பிட்டுவிட்டாராம்?

நாராயணய்யர்: இதையெல்லாம் நம்பிக்கொண்டுதானா நம் காலட்சேபம் நடத்துகிறோம்? என்னவோ மதிள்மேல் பூனைபோல் கிடைத்தால் கிடைக்கிறது. இல்லாவிட்டால் போகிறது? இவ்வளவு நாள் காத்துக்கிடந்த பால்காரனும், மளிகைக் கடைக்காரனும் இன்னும் ஒரு வருஷம் பொறுத்திருக்கிறார்கள். இந்த ஜம்புசாமி இல்லேன்னா, இன்னொரு தம்புசாமி வரான். இவ்வளவுதானே!

வெங்கிட்டு:—அப்பா! இதென்ன மூட்டை! கனமாக இருக்கிறதே!

லக்ஷ்மி:—விவசாய ஆபீசராத்து விசேஷமோல்லியோடா? பழவகைகள் யதேஷ்டமாக வந்திருக்கும். அதிலே கொஞ்சம் அனுப்பியிருப்பார்கள்! மூட்டையை அவிழ்த்துக் கொட்டேண்டா! ஆரஞ்சா, ஆப்பிளா, சாத்துக்குடியா என்று பார்ப்போம்.

நாராயணய்யர்:—பழங்களில்லை! யதேஷ்டமாக விவசாயப் பண்ணையிலிருந்து கிழங்கு காய் முதலியனவற்றை சிப்பந்திகள் கொண்டு வந்து சேர்த்தார்களாம். ஜம்புசாமிதான் மாற்றப்பட்டு அசலூர் போகிறாரே! ஆகையால் பள்ளிக்கூட உபாத்தியாயர்களை மெனக்கட்டு கூப்பிட்டுவிட்டு, ஆளுக்கு ஒரு மூட்டையாகக் கொடுத்து அனுப்பினார். ஹெட்மாஸ்டர் சங்கரய்யர் கூட ஆனந்தம் தாங்காமல், ஓர் உருளைக்கிழங்கு மூட்டையைக் கொண்டு போனார்.

லக்ஷ்மி:—இந்த மூட்டையும் உருளைக்கிழங்குதானா? அப்பாடா உருளைக்கிழங்கு சாப்பிட்டு எத்தனை நாளாய் விட்டது! பாழும் வண்டைக்காயை தின்று தின்று மூளைகுழம்பிப் போய்விட்டது.

வெங்கிட்டு:—மூட்டையைப் பார்த்தால் உருளைக்கிழங்கு மாதிரி தெரியவில்லை. ஏதோ பச்சைக்காய்கறியாக இருக்கும்போல் தோன்றுகிறது.

லக்ஷ்மி:—வெள்ளரிக்காய், மாங்காய், ஏதாவது இருக்கும். சீக்கிரம் மூட்டையைப் பிரி.

(வெங்கிட்டு மூட்டையை அவிழ்த்துக்கொட்டுகிறான்.)

நாராயணய்யர்:—(ஆச்சர்யத்துடன்) ஐய்யய்யோ! அவ்வளவும் வெண்டைக்காய்!

லக்ஷ்மி:—(தலையில் அடித்துக்கொண்டு) சிவ சிவா! அவரவர்கள் அதிருஷ்டத்தைப்போலே தானே இருக்கும்! உங்கள் மூஞ்சியைப்பார்த்தாலே தெரியவில்லையோ வெறும் வெண்டைக்காய் மூஞ்சி! உடனே டத்தவர்களுக்கு உருளைக்கிழங்கு கொடுத்தவர்கள் உங்களுக்கு என்று பிரத்யேகமாக இந்தத் தரித்திரத்தைக் கொடுத்திருக்கிறார்களல்லவா? இதற்காக இந்த வெய்யிலிலே போயே இருக்கவேண்டாம்.

நாராயணய்யர்:—நீதானே போகச் சொல்லி பிராணனை வாங்கினாய்!

லக்ஷ்மி: உங்கள் சமத்திற்குத் தகுந்த வெகுமதிதான்! இந்த வெண்டைக்காய் வாங்கிவர விசிறி மடிப்பு அங்கவஸ்திரம் வேறே! கழற்றி வையுங்கோ.

வெங்கிட்டு: இன்னும் ஒரு வாரத்திற்கு மார்க்கெட்டிலேபோய் கடனுக்கு நிற்கவேண்டாமல்லவா? அப்பாவின் யோகமே யோகம்! (போகிறார்கள்.)



லண்டனில் இந்திய மாணவர் சங்க மண்டபத்தில் சமீபத்தில் ஒரு விருந்து நடைபெற்றது. இதற்கு ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் மனைவி விஜயம் செய்திருந்தார். அவருக்குச் சென்னையைச் சேர்ந்த டாக்டர் லீலாவதி மாலை சூட்டினார்.

★

ஞாபகப்படுத்துகிறோம்

★

'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்

★

அலமுவின் கடிதங்கள்

என்.எஸ்.ஹரி

60

அன்புள்ள அம்மாவுக்கு அலமு அநேக தண்டம் சமர்ப்பித்த விஞ்ஞாபனம்.

சில தினங்களுக்கு முன் பத்திரிகையில் பரபரப்பூட்டக் கூடிய செய்தியொன்று வெளியாகியிருந்தது. அதாவது சென்னையில் 18 வயதுடைய சினிமா நடிகையொருத்தி வழிமறிக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டாள் என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்தச் செய்தியைப் பார்த்தவுடனே சௌந்தரம் சொல்லிற்று: பம்பாய்க்குப் போயிருக்கிறுளே, மகாராஜி, அவளுக்கு இந்தமாதிரியான சம்பவங்கள் ஏதாவது ஏற்படக்கூடாதோ. பம்பாயில் இதெல்லாம் கொஞ்சம் அதிகம் என்று சொல்கிறார்களே. நாளைக்கே இப்படிப்பட்ட செய்தி ஒன்று அவளைப் பற்றி வந்து நான் கண்குளிரப் பார்க்கமாட்டேனு? குடியைக் கெடுத்த பாதகி!' என்று வயிற்றெரிச்சலோடு சொல்லிற்று. பாவம்! இருக்குமோ இல்லையோ? ஒரு குடும்பத்தை அநியாயமாய்க் கெடுத்துவிட்டாளே! 'இதோபார் சௌந்தரம்! நான் சொல்கிறேனென்று கோபித்துக் கொள்ளாதேயும். நீர் சொல்வது வாஸ்தவந்தான். ஒப்புக்கொள்கிறேன. இருந்தாலும் உம்முடைய அகத்துக்காரருக்கு எங்கேபோயிற்று புத்தி என்று கேட்கிறேன்? தாத்தா சதுச்சாஸ்திர பண்டிதர். தகப்பனுர் ஸப்தகாண்டமும் அத்யயனம் பண்ணியிருக்கிறுர். நாடகாந்தம் வாசித்திருக்கிறுர். ஆசார அனுஷ்டானங்கள் தவருதவர். இவரும் சிரோமணி வாசித்திருக்கிறுர். படிப்பில் ஒன்றும் குறைவில்லை: பெரிய ஸந்ததியில் வந்தவர். அப்படிப்பட்டவருக்கு சினிமாவில் சேர்ந்து ஒரு நடிகையைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடவேண்டுமென்று தோன்றியதே! இது அவளுடைய பிழையில்லை. நம்முடைய போதாத காலம் என்றுதான் சொல்லவேண்டும்' என்று மன்னி சொன்ஞள். 'வாய்க்குச் சுளுவாக வேதாந்தம் பேசிவிடலாமே யொழிய காரியத்தில் அதெல்லாம் சரிப்பட்டுவராது. இருந்தாலும் அந்தப்பாதகியினுடைய துர்ப்போதனைதான் இவரை இப்படிக்கெடுத்துவிட்டதென்பதற்குக் கொஞ்சம் கூடச் சந்தேகமே வேண்டியதில்லை. இவருடைய குணம் எனக்குத் தெரியாதா? பிறஸ்திரீகளைப்பார்த்தால் தலையைக் குனிந்துகொண்டு விடுவாரே. அவளுடைய சாகஸந்நான் இது. என் வயிற்றெரிச்சல் வீண் போகாது. நான இன்று சொல்கிறேன் பார்த்துக்கொண்டேயிருங்கள்.

அவள் நல்லபடியாக இந்தப் பக்கம் திரும்பிவரப் போகிறதில்லை' என்றது சௌந்தரம்.

உண்மையாகவே அதன் வயிற்றெரிச்சல் வீண் போகவில்லை. மறுநாள் பத்திரிகையைப் பிரித்தால் பம்பாய் படமுதலாளி ஒருவர் ஒரு சினிமா நடிகையை மானபங்கம் செய்ய எத்தனித்தது பற்றி பம்பாய் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்த வழக்கின் விவரம் பிரசுரமாகியிருந்தது. சௌந்தரத்துக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே காண முடியவில்லை. 'மன்னி! நான்தான் அப்பொழுதே சொன்னேனே. என் வயிற்றெரிச்சல் ஒருநாளும் வீண் போகாது. பிரஸ்தாப நபர் இங்கிருந்து ஓடியவளாகத்தான் இருக்கவேண்டும். அங்கு போனதும் பெயரை மாற்றி வைத்துக்கொண்டிருப்பாள். இவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு, வேறு நபரிடம் சிநேகம் செய்துகொண்டிருக்கிறுள். இவரை ஏமாற்றிய மாதிரி அவரையும் ஏமாற்ற முயன்றிருக்கிறுள். இவர் பாவம்! ஒன்றுந்தெரியாதவர்; ஏமாந்துவிட்டார். அங்குள்ளவர்களிடம் இந்தப் பாச்சாவெல்லாம் பலிக்குமா? வாலை ஒட்ட அறுத்து நன்ருகச் 'சூடு' போட்டுவிட்டான். இவரை அவள் மோசம் செய்துவிட்டு வேறு ஒருவனை அழைத்துக்கொண்டு ஓடிவிட்டாள் என்று ஏற்கனவே நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே இப்பொழுது பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பேர்வழி அவளாகத்தான் இருக்க வேண்டும் இதில் கொஞ்சம்கூடச் சந்தேகம் வேண்டியதில்லை' என்றது சௌந்தரம்.

எங்களுக்குக்கூட அப்படித்தான் தோன்றிற்று. அதாவது சிரோமணியை ஏமாற்றி, அவரிடமிருந்த பணத்தையெல்

லாம் அபகரித்துக்கொண்டு வேறொருவனை சிநேகம் செய்துகொண்டிருக்க வேண்டும். இவள்மாதிரி எண்ணமுடைய பேர்வழிகள் உலகத்தில் எத்தனை பேர்களில்லை? எல்லோரும் சிரோமணிமாதிரி 'ஏமாளமாக' இருந்துவிடுவார்களா? இவளிடமிருந்த பணத்தை அபகரிக்க ஒருவன யோசனை செய்திருக்க வேண்டும். சிநேகம் செய்துகொண்டான். இருந்த பணத்தை அபகரித்துக் கொண்டான். இதுதான் நாங்கள் செய்த முடிவு.

அவளுக்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் நாங்கள் ஊகித்தபடி இல்லை. அதாவது சிரோமணியை ஏமாற்றிவிட்டு பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு பூனாவில் ஒரு சினிமாக் கம்பெனியில் சேர்வதற்காக ஓடியிருக்கிறுள். முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறுள். பம்பாய்க்கும் பூனுவுக்குமிடையில், ஒரு ஸ்டேஷனை விட்டு ரயில் கிளம்பி சிறிது தூரம் சென்றதும் எமகிங்கரர்கள் மாதிரி இரண்டு, மூன்று 'தடியர்கள்' முகமூடியணிந்துகொண்டு இவள் பிரயாணம் செய்துகொண்டிருந்த முதல் வகுப்பு வண்டியில் பிரவேசித்திருக்கிறுர்கள். அந்த வண்டியில் இவளைத் தவிர வேறு யாரும் இல்லை. வந்தவர்கள் பரபரவென்று இவளுடைய காலையும் கையையும் சேர்த்துக் கட்டியிருக்கிறுர்கள். கூச்சல் கீச்சல் போடப் போகிறுளே யென்று தயாராய்க் கொண்டு வந்திருந்த துணிப்பந்தை வாயில் திணித்திருக்கிறுர்கள். பரபரவென்று அவள் அணிந்துகொண்டிருந்த நகைகளைக் கழற்றிக்கொண்டு ஜன்னல் வழியாக அவளை வெளியில் தூக்கி யெறிந்திருக்கிறுர்கள். அடுத்த ஸ்டேஷன் வந்ததும் அவளுடைய பெட்டி, படுக்கை, முதலியவைகளை எடுத்துக் கொண்டு ஜாம் ஜாம் என்று போயிருக்கிறுர்கள். மறுநாள் காலையில் மாட்டுக்காரப் பையன்கள் வந்து பார்த்திருக்கிறுர்கள். அந்த சினிமாக்காரி கை கால்களில் கட்டுகளுடன் வீழ்ந்து கிடப்பதைக் கண்டார்கள் இரவெல்லாம் கதறியிருக்கிறுள். அந்த நடுக்காட்டில் கேட்பார் யார்? பாவம்! அந்த மாட்டுக்காரப் பையன்கள் வந்து கட்டை அவிழ்த்து விட்டிருக்கிறுர்கள். வலது கை முறிந்துவிட்டதாம். நெற்றியில் பலத்த காயம்: ஒரு கூர்மையான கல் பொத்து அரை அங்குல ஆழம் உள்ளே சென்றிருக்கிறது. இரத்தம் வெள்ளமாய்ப் பெருகியோடியிருக்கிறது. உடனே அவர்கள் அவளைத் தூக்கிக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள் கை முறிந்தது முறிந்ததுதான், கூடிவராது என்று டாக்டர் சொல்லிவிட்டாராம். நெற்றிக் காயம் மாத்திரம் ஆறிவிட்டதாம். பம்பாய் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நடைபெறும் வழக்கிற்கும் இவளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதாம். இவளும் போலீஸுக்கு ரிப்போர்ட்டு செய்து திருடர்களைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்று பார்த்தாளாம். ஒன்றும் பிரயோஜனப்படவில்லையாம். ஆனால் போலீஸார் மாத்திரம் இன்னும்



"........அன்று மைத்துனர் கோபுவும் 'இவரும்' ஏ்வாமையில் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்......"

புலன் விசாரித்து வருகிறார்களாம்.

இதெல்லாம் சிரோமணி வந்த பிறகு தெரிந்த தகவல். சிரோமணி வந்து இரண்டு மூன்று தினங்கள் கழித்த பிறகு அதனுடைய ஸமாசாரம் இங்கு எல்லாருக்கும் தெரிந்திருப்பதைக் கண்டுகொண்டு விட்டது. அதனுடைய நண்பர்கள் விசாரித்திருக்கமாட்டார்களா? இனி ஒளிப்பதில் பிரயோஜனமில்லை யென்பதைத் தெரிந்துகொண்டு, தானாகவே மொத்த கதையையும்—அதாவது, தான் பம்பாய்க்குச் சென்றதுமுதல் லாகூர் சென்ற வரை நடந்த கதையையெல்லாம் — ஒன்றுவிடாமல் ஒப்பித்துவிட்டது. அதை எழுத இப்போது நேரமில்லை. அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்

இன்னொரு விஷயம் முக்கியமாக முன் கடிதத்திலேயே எழுத வேண்டுமென்றிருந்தேன். மறந்தே போய்விட்டேன்.

சென்றவாரம் விமலா இங்கு வந்திருந்தபோது ஒருமாதிரியாக இருந்தாள். பழைய கலகலப்பு, உற்சாகம், ஒன்றையுங் காணோம். மனதில் ஏதோ ஏக்கம் பிடித்திருப்பவள்போல் காணப்பட்டாள். அவளாக சொல்லாமலிருக்கும் போது நாம் என்னவென்று கேட்பது என்று ஒன்றும் கேட்காமலிருந்துவிட்டேன். மன்னி மாத்திரம் சொன்னாள். 'இதில் ஏதோ முக்கிய விசேஷமிருக்கிறது. இல்லாவிட்டால் முகத்தில் இவ்வளவு கவலைக் குறிகள் தோன்றுவதற்கு நியாயமில்லை. மெதுவாகக் கொஞ்சம் 'வாயைக் கிளறி' தான் பார்க்கிறேனே,' என்று. நான் சொன்னேன்: அதெல்லாம் நாம் ஒன்றும கேட்க வேண்டாம். நல்லபடியாகப் பதில் சொன்னால் போயிற்று. அப்படிக்கில்லாமல் 'எக்கச்சக்கமாக' எதையாவது சொல்லி வைத்ததானால், நமக்கேன் அந்த வீண்வம்பெல்லாம். அப்படி முக்கியமான விஷயமாக இருந்தால் இன்றைக்கில்லாவிட்டால் நாளைக்கே தெரியப்போகிறது. ஆகவே அது சொல்லாதிருக்கும்போது நாமாக ஒன்றும் கேட்கவேண்டாம்; என்றேன். ஆகவே மன்னி அதை ஒன்றும கேட்கவில்லை. அதுவும் ஒன்றும் வெளியிடவில்லை. ஆனால் முகம் மாத்திரம் பிரசன்னமாக இல்லை

அன்று மைத்துனர் கோபுவும் 'இவரும்' தனிமையில் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். ரொம்பவும் அந்தரங்கமான விஷயம்போல் தோன்றியது. விமலா இருந்த மாதிரிக்கும் இவர்கள் பேசியதற்கும் ஏதோ சம்பந்தம் இருந்தாக வேண்டுமென்று அப்பொழுதே ஊகித்து விட்டேன். நான் ஊகித்தது கொஞ்சம்கூடப் பிசகவில்லை.

'இவர்' வந்தார். 'நீ ஒருத்தி மாத்திரம்தான் வீட்டுக்கு எஜமானி என்று நினைக்காதே. சின்ன எஜமானியும் ஒருத்தி இருக்கிறாள்' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு இவராகவே சொன்னார். விமலா ஒரே பெண். தகப்பனாருக்கு ஸப்ஜட்ஜ் வேலை. ஏராளமான சொத்து இருக்கிறதென்று விமலாவின் கல்யாணத்தின்போது சொன்னார்களே, அத்தனைக்கும் கடன் பிரமாதமாக இருக்கிறதாம். கடனுக்குப் போக மிஞ்சக்கூடியது ஒன்றுமில்லையாம். ஆகையால் கோபு இங்கேயே வந்துவிட உத்தேசித்து விட்டான்.' என்றார்.

மனுஷ்யனுடைய உள் அந்தரங்கம் யாருக்கு என்ன தெரிகிறது? ஸப் ஜட்ஜ் உயிருடன் இருக்கும்வரையில் தடபுடலாகத்தான் இருந்தது. மனுஷ்யன் மறைந்த பிறகுதானே எல்லாம் அம்பலத்துக்கு வருகிறது! அதோ விமலா வருகிறாள்...

இப்படிக்கு,
உன் அன்புள்ள
அலமு.



நெஞ்சே கேளாய்!

சாரண பாஸ்கரன்



விளக்குதரும் தீச்சுடரைப் பழமென் றெண்ணும்
விட்டிலுக்கும் தாழ்ந்ததுவா மனித வர்க்கம்?
கலக்கம்தரும் ஆழ்கடலில் கருத்தை வீழ்த்தும்
கண்கெட்ட மனிதர்களோ அறிவுப் பீடம்?
துலக்கமுடன் தோற்றுகின்ற உண்மை இன்பச்
சுவட்டினிலே செல்லாத சிந்தை நோக்கம்
உலக்கையினுள் [சிக்கிவிட்ட தானியம்போல்]
உருக்குலைதல் நிச்சயமே நெஞ்சே கேளாய்!

பக்கத்தில் ஏழையர்கள் பசியால் வாடப்
பார்த்திருப்போர் பகுத்தறிவு படைத்தோ ராமோ?
துக்கத்துப் பெரும்புயலில் சுழன்று வீழும்
சோதரரைத் தூக்கிவிடார் தொண்ட ராமோ?
திக்கெட்டும் துன்பப்பேய் திரளக் கண்டும்
தீவிரமே கொள்ளாதோர் தியாகியாமோ?
கக்கட்டும் நினகண்கள் கடமைத் தீயை!
கரியட்டும் அனியாயம் நெஞ்சே உன்னால்!

காரிருட்டு. ஊரெல்லாம் உறங்கிக்கொண்டிருக்கிறது. 'முல்லைமலர்கள் வானத்திலும் மலர்ந்தனவோ?' என்று சொல்லும்படி மினிரும் நட்சத்திரங்களும், வெள்ளிக் கும்பம் போலக் கிழக்கே தோன்றிய நிலாமுகமும் மேகக்கூட்டங்களில் மறைந்து விட்டன. எங்கிருந்தோ கிளம்பிய புயற்காற்று ஹோ ஹோ வென்று அலையும் பேய்போல் அலறியது வீதியெல்லாம். அரண்மனையில் துரியோதனாதியர்களின் உள்ளங்களிலும் ஒரே மையிருட்டும் பேய்க்காற்றும் தான்.

இரகசிய மண்டபத்திலே

பீஷ்மர், துரோணர், கிருபர் முதலான பெரியோர்களுக்கெல்லாம் தெரியாமல், ராணி காந்தாரிக்கும் சற்றும் தெரியாமல், துரியோதனனும், தம்பி துச்சாஸனனும் தோழன் கர்ணனும், மாமன் சகுனியும் இரகசியமாக ஒரு மந்திராலோசனை-மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்கள். கொஞ்சநேரத்தில் மற்றத் தம்பிமார்களும் வந்தார்கள். பலவேறு சாஸ்திரங்களிலும், மற்றக் கல்வி கேள்விகளிலும் தேர்ந்து தெளிந்த செழுமதி வாய்ந்த அமைச்சர்களையும் துரியோதனன் அழைத்திருந்தான் இரகசியமாக: அவர்களில் சிலரும் வந்திருந்தார்கள், அந்த

86

சதியாலோசனை

★

இரவிலே, அந்த மண்டபத்திற்கு:

தந்தையும் தம்பிமாரும்
கன்னனும் சகுனிதானும்
சிந்தையில் தெளிந்தகல்விச்
செழுமதி அமைச்சர்தாமும்
முந்தா(வு) உயர்த்தகோமான்
ஏவலால், முழுதும் எண்ணி
மந்திரம் இருப்பான் வந்(து),ஓர்
மண்டபம் குறுகினரே.

[கன்னன்—கர்ணன். முந்து அரவு உயர்தகோமான்—பாம்புக்கொடியையுடைய துரியோதன மன்னன். மந்திரம்—மந்திராலோசனை. மந்திரம் இருப்பான் — மந்திராலோசனையில் இருப்பதற்கு. குறுகினர்—அணுகி வந்தார்கள்.]

துரியோதனன் ஆசனத்தில் அமர்ந்ததும் தந்தையைக்கூடக் கவனியாமல் அமைச்சர்களை நோக்கினான். அதற்குள் சந்திர வட்டக்குடை பிடித்தார்கள் பாம்புக் கொடியனுக்கு. தீவட்டிகள் துரியோதனன் விருப்பத்திற்கு இணங்க மங்கலாய் எரிந்து கொண்டிருந்தன; அந்தச் சிற்றொளியில் 'அற்பனுக்கு வந்த பவிஷு போல'த் தெரிந்தது கொற்ற வெண்குடை.

ஆலோசனையில் ஆழ்ந்தது

துரியோதனன் அமைச்சர்களை நோக்கி, 'மதிவல்லோர்களே! மாடு மேய்ப்பதில் வல்லவன், காடுகளிலே மறைந்து போன பாண்டவர்களை ஆசை காட்டி அழைத்து வந்திருக்கிறான், தனித்து வந்திருக்கிறான். என்ன செய்யலாம் சொல்லுங்கள், பார்க்கலாம்' என்று கேட்டான்.

நீதறு மதிவல் லோரைச்
செழுமதிக் குடையான் நோக்கிப்,
'பாதப வனத்தில் போன
பாண்டவர் தம்மை மீண்டும்
மேதக அழைத்து, "நாடு
வேண்டுமின்' என்று மூட்டும்
யாதவன் தனித்து வந்தான்
என்செய்வ(து)? இயம்பும்'
[என்றான்.

[செழுமதிக்குடையான்—பூர்ணசந்திரனைப் போன்ற கொற்றவெண் குடையுடைய துரியோதனன். பாதப வனம்—மரங்கள் நிறைந்த காடு. மேதக—மேன்மையாக. வேண்டுமின்-வேண்டுங்கள்.)

அமைச்சர்கள் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஆலோசனையில் ஆழ்ந்தார்கள். ஆனால், திருதராஷ்டிரன் பளிச்சென்று பதில் சொன்னான். மைந்தனுக்குப் பொருத்தமாகவே இப்பொழுது பேசினான். அந்தச் சூழ் நிலையில் அவனுடைய அறிவுக்கண்ணும் இருண்டு போயிற்று:

பொரும்படை மைந்தன் கூறத்,
தந்தையும் பொருந்தச்
சொல்வான்:
'இரும்புலி வலையில் பட்டால்,
விடுவரோ எயின ராஜேர்?
வரம்பில்வெஞ் சேனை யோடும்
வளைந்(து)இனிமாயன்தன்னைக்,
கரும்பொழு(து) அகலு முன்னே
கொல்வதே கருமம்!' என்றான்.

[பொரும்படை மைந்தன் — சண்டைபோடக்கூடிய சேனைகளையுடைய துரியோதனன். இரும்புலி—பெரிய புலி. எயினர்—வேடர்கள். வரம்பில்—அளவில்லாத. வெஞ்சேனை—கொடிய சேனை. மாயன்—கண்ணன்.கரும்பொழுது-மையிருட்டாகிய இராப்பொழுது.]

'பெரும் புலி வலையில் சிக்கி விட்டால் வேடர்கள் விடுவார்களா? இந்தக் கரும்பொழுது புலர்வதற்கு முன்பே மாயக் கண்ணனைப் பரமபதத்திற்கு அனுப்பிவிட வேண்டியது தான்! இனி இங்கே வைத்துப் பார்க்கத்தேவையில்லை!' என்று பேசியது திருதராஷ்டிரன் தானா? கண்ணனுடைய தெய்வப்பிறவியையும், அபார சக்திகளையும் கேள்விப்பட்டவன் தான். சகவாசதோஷம் இவ்வளவு குறுக்கு வழியைக்கண்டு பிடிக்க உதவியது! துரியோதனனுடைய அக இருள், தந்தையையும் தொத்திக்கொண்டது, அச்சமயம்.

இருளுக்கிடையே நிலவு

திடீரென்று 'தந்தையே! தாங்கள் கற்ற கல்வி நன்று, நன்று; எந்தக் குருகுலத்தில் கற்றுக்கொண்டதோ? ஐயோ, அருமையான அறிவுக்கண்ணும் போச்சே!' என்று ஓங்கி அடித்தது ஒரு குரல். துரியோதனனைத் தவிர, தந்தையை எதிர்த்துப் பேசக்கூடியவர் வேறொருவரும் இல்லை, திருதராஷ்டிர புத்திரர்க்கிடையே. அப்படியானால் யார் இப்படி அதட்டும் குரலில் பேசியிருக்கக்கூடும்? மேலும், தந்தை மூத்த மைந்தனோடு ஒத்துப்போனதற்கு 'சபாஷ்' போடாமல் கண்டனம் செய்யத் துணிந்த அந்த மைந்தன் யார்? அந்த முகத்தைப் பார்க்க வேண்டாமா?

இதோ பார்த்துக்கொள்ளுங்கள், பரிகாசப்புன்னகை தோய்ந்த அம்முகத்தினோடு அகத்தையும்! இந்தப் பையனும் இப்பேர்ப்பட்ட அதிரடிக்காரனா? உற்றுப் பாருங்கள்:

கண்ணிலான் உரைத்த மாற்றம்
கேட்டலும், 'காவ லோரில்
மண்ணில்ஆர் இதற்கு முன்பு
தூதரை வளைந்து கொன்றார்?
எண்ணிலா இந்த எண்ணம்
எவ்வழிக் கற்ற(து)?' என்று
வெண்ணிலா முறுவல் செய்து
விகர்ணனும் விளம்ப லுற்றான்.

[கண்ணிலான் - கண்ணில்லாத திருதராஷ்டிரன். மாற்றம்-வார்த்தை. காவலோரில்-அரசர்களில். எண்ணிலா—ஆலோசனையில்லாமல் வெளியிட்ட. எவ்வழி—எந்த இடத்தில். வெண்ணிலா முறுவல்—வெண்ணிலவைப்' போல் தோன்றிய பரிகாசப் புன்னகை. விளம்பலுற்றான்—சொல்லத் தொடங்கினான்.]

துரியோதனாதியர்களான நூற்றுவருள் விகர்ணன் ஒருவன்தான் நல்லவன்; காரிருளுக்கிடையே வெண்ணிலவுபோலத் தோன்றியவன், இவன்பேச்சும் இப்போது இருளுக்கிடைய நிலவாக ஒளி வீசியது.

'பழியுடைப் பகைஞ ரேனும்
தன்பெரும் பதியில் வந்தால்,
அழிவுறக் கோறல் பாவம்,
ஆண்மையும் அல்ல என்பார்;
கழிகடற் சேனை யோடு
கங்குலின் வளைந்திட் டாலும்,
எழிலுடைக் கொண்டல் வண்
ணன்
அகப்படான் எவர்க்கும்!'
என்றான்.

[பதி—ஊர். கோறல்-கொல்லுதல். கழிகடற் சேனை-கடல் போல் மிகுதியான சேனை. கங்குலின்-இரவில். எழில்-அழகு. கொண்டல் வண்ணன்-நீர் கொண்டு பெய்ய எழுந்த நீல மேகம் போல் குளிர்ச்சியும் அழகும் வாய்ந்த தோற்றமுடைய கண்ணன்.]

'கொடிய பகைவனும் அதிதியாக நம் ஊருக்கு வந்து விட்டால் கொல்லலாமா? பாவ புண்ணியங்களை ஒப்புக்கொள்ளாத நாஸ்திகர்களும், ''அந்தக் கொலைத்தொழில் புலைத் தொழிலே; அதில் ஆண்மையில்லை'' என்பர். மேலும் இந்தப் புயல் காற்று வீசும் இரவிலேயே எச்சரிக்கையின்றி ஒரு பெருஞ்சேனையுடன் கடல் போல் வளைந்துகொண்டாலும் அந்த வலையிலும் அந்தப் புலி அகப்பட்டுக்கொள்ளாது!' என்று விகர்ணன் சொன்னான்.

அதிர் வெடிகள்

ஒரே ஆங்காரம் துச்சாஸனனுக்கு. சீறி விழுந்தான் பாம்பு போலே, தம்பியை நோக்கி. பிறகு அருமைத் தமையனை நோக்கியும் சீறினான்; 'என்ன, அண்ணா! இப்படி ஒரு சிறு பயலை விடலாமா இந்த இரகசியக் கும்பலில்-இந்த ஆலோசனை-மண்டபத்தில்,-தேவ பூஜையில் கரடி விட்டது போல!'

வெம்புய வலியால் மாதை
விரிதுகில் உரிந்த வீரன்,
நம்பியை முனிந்து சீறித்
தமையனை நோக்கிச் சொல்
வான்;
'வம்பவிழ் அலங்கல் மார்பா!
மந்தணம் உரைக்க லுற்றால்,
இம்பர்மற்(று) யாது சொல்ல
இளைஞரை அழைத்த(து)?'
என்றான்.

[வெம்புய வலி-கொடிய தோள் வலிமை. மாதை-மாதுரௌபதியை. விரிதுகில்-(கண்ணன் அருளுக்குச் சான்றாக) விரிந்துகொண்டே வந்த பட்டாடை. வம்பவிழ்-வாசனை வீசுகிற. அலங்கல்-பூமாலை. மந்தணம்-இரகசியம். உரைக்கலுற்றால்-பேசத் தொடங்கினால். இம்பர்-இவ்விடம்.]

தன் தோள்வலியின் கொடுமைகொண்டு துகில் உரிந்த வீரனிடம், கொடுமையான—நெருப்பைக் கக்கி அறிவைப் புகைக்கும்—அதிர்வெடிகளைத் தவிர, வேறு பாஷையை எதிர்பார்க்க முடியுமா?

'அதிரதர் முதலா வுள்ள
அவனிபர் வளைந்து நிற்ப,
எதிர்முகில் தவழும் கோயில்
எரியினை எங்கும் மூட்டி.
விதுரனும் அவனும் சேர
வெந்திட மலைவ தல்லால்,
மதிபிறி(து) இல்லை! இன்னே
வல்விரைந்(து) எழுமின்!'
என்றான்.

[அதிரதர்-ஒருவகைத் தேர் வீரர். அவனிபர்—அரசர்கள். முகில் — மேகம். கோயில் — (இங்கே) வீடு. எரி—தீ. மலைவது—எதிர்ப்பது. மதி பிறிது இல்லை—புத்திசாலித்தனமான காரியம் வேறொன்றுமில்லை. இன்னே—இப்பொழுதே. வல்விரைந்து—வெகு விரைவாய். எழுமின்—எழுங்கள்.]

'இதுதான் புத்திசாலித்தனமான காரியம், வேறொன்றுமில்லை' என்று தீர்மானிக்கும் துச்சாஸனன் சொல்லுகிற ஆலோசனை இது: 'அப்பா சொன்னபடியே கண்ணனை வளைத்துக்கொண்டு பொழுது விடிவதற்குள் கொன்று தீர்க்க வேண்டியதுதான்; தம்பி விகர்ணன் சொல்லுகிறபடி மாயக் கண்ணனைத் தப்பவிடக் கூடாது; சிற்றப்பா வீட்டில் தீயை வைக்கவேண்டும், இருவரும் ஒருசேர வெந்துபோகும்படி! தப்பமுயன்றால், வெளியே வளைந்து கொண்டிருக்கும் ரத வீரர்கள் நெருப்பில்தள்ளிவிடுவார்கள்!'

'சுபஸ்ய சீக்ரம்' என்று வடமொழியில் சொல்வதுண்டு. தான் சொல்லும் 'சுபகாரிய'த்தையும் இந்தப் புத்திசாலி வெகு விரைவில் செய்துவிட வேண்டும் என்கிறான். 'போதும் ஆலோசனை; கிளம்புங்கள், இப்போதே கிளம்புங்கள்' என்று துரிதப்படுத்துகிறான். ஆனால்,

வீரப் பேச்சு

''இது ஆண்மையன்று கோழைத்தனம்' என்று படுகிறது கர்ணனுள்ளத்திலே. 'நேருக்கு நேராக நின்று அம்பு போட்டுக் கொன்று விடுவேன் கண்ணனையும்!' என்று கர்ணன் துச்சாஸனனுடைய ஆலோசனையை வெட்டிப் பேசுகிறான்.

'சூரியன் எழுந்து செங்கதிர் வீசிச் சீறினால், இருள் நிற்பதுண்டோ? நெருப்பைக் கக்கும் என் ஒரு பாணத்திற்கு முன் கண்ணன்தான் உயிரோடிருக்க முடியுமா?' என்பது கர்ணன் வார்த்தை:

செங்கதிர் எழுந்து சீறின்,
'செறிஇருள் நிற்ப துண்டோ?
இங்கிவன் இருந்த இல்லில்
எரியிட வேண்டு மோதான்?
வெங்கணை ஒன்றி னாலே
விளிந்திட வென்றி கொள்வேன்;
கங்குலின் எழுமின்' என்று.
கன்னனும் கனன்று சொன்னான்.

[செறிஇருள்— அடர்ந்த இருள். இங்கிவன்-இங்கே இக்கண்ணன். இல்லில்—வீட்டில். வெங்கணை—கொடிய அம்பு. விளிந்திட— செத்துப்போகும்படி. வென்றி—வெற்றி. கங்குலின்—இரவிலே. எழுமின்—கிளம்புங்கள். கன்னன்—கர்ணன்]

இந்த வீரப்பேச்சு சகுனிக்குப் பிடிக்கவில்லை. 'காரியத்திற்குத் தானே வீரியமெல்லாம்? கள்ளமாயனைக் கள்ளத்தனமாய்க்கொல்வதில் என்ன ஆண்மைக் குறைவு ஏற்படப்போகிறது?' என்று நினைக்கும் சகுனி, 'கர்ணனுடைய தர்ம யுத்தமெல்லாம் கண்ணனிடம் பலிக்காது!' என்று தீர்மானிக்கிறான். 'திருதராஷ்டிரர் - திட்டமாகிய வலையில் புலி விழாது! துச்சாஸனன்-திட்டத்திலும் புலிவேட்டை சரியாக வராது! புலி இங்கிருந்து தப்பிவிட்டால் நாளை ஐவருடன் நம்மையே வேட்டையாடி விடும்!' என்பது சகுனியின் பயம். ஆகவே இவனுடைய மூளை ஒரு புதிய திட்டத்தைக் கண்டு பிடிக்கிறது. இதுதான் மருமகனுக்கும் பிடிக்கிறது.

காரியத்திலே கண்

துரியோதனன் முதலானவர்களின் இதயங்கள் இருண்ட இதயங்களென்றால், இருளை அடைத்துத் திணித்து வைத்திருக்கும் இதயம் சகுனிமாமாவுக்கே சொந்தம்! இனி இத்தகைய இதயத்திலிருந்து பிறக்கும் ஆலோசனையைச் சகுனியின் வாய்மொழியாகவே தெரிந்துகொள்வோம்.

ஆசீர்வாதம் யாருக்கு ?

'குப்புச்சி பாட்டி, நமஸ்காரம் பண்றோம்...''
''ஐயோடி, நான் எத்தோட சேத்தி, அவரைக்கா கூட்டு! நீங்க எங்கேயானும் க்ஷேமமா புள்ளை குட்டிகளை பெத்துண்டு, அவாளெல்லாம் நன்னா படிச்சு பஸ்ட்லே பாஸ்பண்ணி, கல்யாணம் கார்த்திகை சேசிண்டு குடியும் குடித்தனமுமா இருக்கிறதெ பாத்தப்புறம், எப்பவேனா இந்த காவேரி கரையிலேயே இந்தக் கெழத்துக்கு நல்ல சாவை குடுத்துடுரு பகவானே......!''

வழி காட்டி

டி. வி. சுவாமிநாதன்

சாத்தியிருந்த சாளரக் கதவு களைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான் நான்கு வருட யுத்த சேவையிலிருந்து விடுபட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த ஸப் லெப்டினண்ட் கானல் சுந்தரம். ஆறுகும் மன வேதனையால் அவன் இதயம் புழுங்கிக் கொண்டிருந்தது. சுரத்தே சிறிது மற்றுச் சோர்வு வரியிட்டிருந்தது அவன் வதனத்தில். வியாகூலத்தின் வெடிப்புக்களும் சோகத்தின் சுருக்கங்களும், பிய்த்துப் பிடுங்கும் பிரச்னையின் பிருண்டல்களும் முகத்தை ரணப்படுத்தியிருந்தன.

இள வெயிலில் பசுமைபோர்த்த சிறு சிறு குன்றுகள் மனோகரமாகக் குளிர் காய்ந்துகொண்டு துயின்ற கண்கொள்ளாக் காட்சி இத்தாலியில் சூரிய ஸ்நானத்தில் திளைக்கும் மலைத் தொடர்களை நினைவுறுத்தின. அமைதியைக் காணமுடியாத ஒரு சிக்கலின் சிலந்தி வலையால் கட்டுண்டு புண்ணுறும் இதயத்திலிருந்து ஒரு பெருமூச்சு புறப்பட்டது. இருப்புக் கொள்ளாது அலமந்தது அவன் சிந்தை.

நான்கு முழு வருடங்கள்—ஏன்? அதற்கு மேலாகவே இரண்டு மாதங்கள்—அக்கரைச் சீமைகளில் அன்னிய தேசங்களில்—அபாயம் செறிந்த போர் முனைகளில் அலைந்துவிட்டு முதல் முறையாக வீடு திரும்பும் வீரன் வருகைத்தால் வாட்டமுற்றது நம்பத்தகாத செய்தியல்லவா? இந்த இருபது மாதங்களில் எத்தனையோ முறை காயமடைந்து படுக்கையில் விழுந்திருக்கிறான்! வித விதமான சீதோஷ்ண ஸ்திதிகள் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது காய்ச்சலாய்க் கிடந்ததுமுண்டு! ராணுவ டாக்டர்கள் வேளாவேளைக்கு வந்து பரிசோதனை செய்துதான் சென்றனர். வைத்திய உதவிக்கும், வியாதிக்காரனுக்குப் பழம், பால், பிஸ்கத்துகளுக்கும் பஞ்சமே கிடையாது ஆனால் அன்பும் ஆதரவுமாய் ஒரு வாய், வெந்நீர் ஊற்ற யாராவதுண்டா? அப்பொழுதெல்லாம் தாய்நாடு திரும்பி, சொந்த கிராமம் சேர்ந்து, குடும்பத்துடன் சந்தோஷமாக ஒன்று படுவோமா என்று ஒரு பக்கம். சகிந்த ஆவல் அவன் உள்ளத்தில் உருவெடுக்கும்.

பின் ஏன் இன்று இந்த நிலை கொள்ளாத தத்தளிப்பு? ஆம் கிராமத்தில் கற்பகவல்லி அவன் வருகைக்காக வழிநோக்கிக் காத்துக்கிடப்பாள். ஆகா! அவள் தளுகட்டும்! எத்தனை அழகான யுவதி ஜீவகளை பொங்கும் முகம், கள ஊற்றுக்களாகிய கண்கள், கருநாகம்போன்ற பின்னல் கிராமியக் கவர்ச்சி அவளிடம் குடிகொண்டிருந்தது. கிராமத்து நாட்டாண்மைக்காரர் வீட்டுப் பெண். அவளைத் தங்களுக்கு நாட்டுப்பெண் ஆக்கிக்கொள்ள எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தனர். கணைக்காறு இளைஞர்களின் கனவுக் கன்னிகை கற்பகவல்லி 'முறைப்பையன் வருவான்' தனக்கு மாலையிட அவள் ஆயிரம் கோடி தேவ அடிக்குடன் காத்துக் கொண்டிருப்பாள். ஆனால்—ஆவல் கற்பகவல்லியின் காதலை அவ்வளவு சுவையைச் சித்தரித்துக்கொள்ள முடியவில்லை இப்பொழுது ஸப்லெப்டினண்ட் கர்னல் சுந்தரத்தால்.

* * *

ரயில்தன் பாட்டில் முன்னேறியது, சுதந்தரத்தின் சித்த சலனத்தை சிறிதும் பொருட்படுத்தாது. சுந்தரத்தின் சிந்தனைகள் நேர்மாறான திசையில் பின்னேறிச் சென்றன. புகைவண்டியின் ஓலத்தையும் ஓட்டத்தையும் துளியும் லட்சியம் செய்யவில்லை அது!

ஆறு மாதங்களுக்குமுன் இத்தாலியப் பல்தலையில் மலைப்பஞ்சள் வெயிலை நுகர்ந்தவாறு லீனாவின் பக்கத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த இன்ப நினைவு மோகனமாக மிதந்து வந்தது.

2

லீனாவும், அவனும் நண்பர்களான முறையே மோகனமானது. அந்தப் பரிச்சயத்துவக்கத்திலேயே—பாலையிலேயே—புதுமை பொங்கிற்று. இவ்வளவிற்கும் கற்பகவல்லியைப்போல அவள் அத்தனை அழகியல்ல. கொஞ்சம் அலட்சியம் என்றே வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். குட்டையான கேசம் கோதிவிட்டுக்கொண்டு கிளம்பிவிடுவாள். ஒற்றை நாடி தேகம், ஆனால் கண்களில் மட்டும் அசாதாரணமான உயிர்ச்சக்தி. வசாமகோசரமாகப் பேசும் பார்வை நடையில் ஒரு மிடுக்கு; இராணுவ நடை. ஆம்! இத்தாலியிலேயே பாஸிஸத்திற்கு விரோதமாக நேசநாடுகளின் பக்கம் புரட்சி விதைத்துக்கொண்டிருந்த இரகசியப்படையின் அங்கத்தினர்களில் ஒருத்தி 'துவேஷிகள்' என்று அவர்களுக்கு அரசாங்கம் செல்லப் பெயர் சூட்டியிருந்தது. நாஜிஸம், பாஸிஸம் இரண்டு மிருக வெறிகளும் ஐக்கியப் பட்டு வாழ்வின் சர்வசாதாரணமான உரிமைகள் கூடப் பறிக்கப்பட்டுவிட்ட பொது ஜனங்களில் ஆர்வமும் துணிச்சலும் படைத்தவர்கள் அமைத்த 'கொரில்லாப் படை,'

சர்வாதிகார ஆட்சியின் மீது கடுங் கசப்பு கொண்ட குடியானவப் பெண்மணி லீனா இந்த இரகசிய இராணுவத்தில்-தொண்டர் பட்டாளத்தில்-சேர்ந்துவிட்டாள். எதிருறும் எல்லா இன்னல்களையும் அரவணைக்க சின்ன மனிதர்களிடம் சிறுமை வாழ்வு நடத்தச் சம்மதிக்க மறுத்தது அவளது தார்மீக சிந்தை. இரண்டரை ஆண்டுகளாக ஓடி ஒளிந்து யுத்தம் தொடுத்து வரும் வீரக்காரிகை. உயிரைப் பணயம் வைத்த உத்தமி.

* * * *

வாழ்வில் முதன் முறையாகத் தான் அவளைச் சந்தித்தபோது நிகழ்ந்த சம்பவங்களை மனத்திரையில் சித்தரித்து மகிழ்ந்தான் சுந்தரம். ஆர்னோ நதிக்கரையில் அமைந்த ஒரு ஓட்டலில் சிற்றுண்டி சாப்பிடப் புகுந்தனர், சுந்தரமும் அவனுடைய சில சிநேகிதர்களும். செக்கர் வானத்தின் குங்குமச் சிவப்பு நதியின் நெளிவுகளில் பிரதிபலித்தது. அறையில் நிலவிய அமைதியையும் நிசப்தத்தையும் குலைத்துக் கொண்டு திடும் பிரவேசமாக விஜயம் செய்தனர் சில வீரர்கள். உடனேயே அவர்களை அடையாளம் புரிந்துகொண்டனர் சுந்தரமும், சகாக்களும். பாஸிஸ பயங்கரத்தை எதிர்க்கும் 'பார்ட்டிஸான் ஆட்சியின் கொரில்லா சைன்யத்தைச் சேர்ந்தவர்கள். கையில் துப்பாக்கி. கழுத்தை யணைத்து ஒரு சிகப்புத் துணி. ஏகக் கூச்சல் எழுப்பிய வண்ணமே உள்ளே நுழைந்தனர். காக்கி முழு நிஜாரும், சட்டையும் கழுத்தில் அந்த சிவப்புக்குட்டையு மணிந்திருந்த யுவதி ஒருத்தி, அவர்களுடன் வந்திருந்தாள். அவள் கையிலும் துப்பாக்கி. ஆனால் கண்களில் அயர்ச்சி; களைப்பு. நடையில் தளர்ச்சி; சோர்வு.

மற்றவர்களைப்போல் அவள் ஆர்ப்பரிக்கவில்லை. மெதுவாக, ஒரு மேஜையின்முன்போய் உட்கார்ந்துவிட்டாள். ரொட்டியும், திராட்சை மதுவுகொண்டுதரும்படி துப்பாக்கி முனையில் மற்றவர்கள் கட்டளையிட்டனர். பாஸிஸ்டுகளுக்குப் பயந்த முதலாளி இணங்க மறுத்தால்...! கட்சிகதங்கள் முழக்கினர். ஆனால் அந்த இளநங்கை முழங்கைகளை பளிங்கு மேஜையின் வழ வழப்பான பரப்பில் ஊன்றி உள்ளங்கைகளுக்குள் முகத்தைப் புதைத்து தூங்கத் தொடங்கினாள்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் சுந்தரத்தின் சிநேகிதர்கள் கிளம்பினர். தான் கொஞ்சநேரம் கழித்தே வரப்போவதாகத் திர்மானமாய்க் கூறிவிட்டான் சுந்தரம். மின் வெட்டைப்போல் தோன்றிய அந்த மங்கை அவன் கற்பனையைக் கவர்ந்தாள், வர்ணிக்க வொண்ணாத வகையில். வெகு சாதாரணமான அழகி. கற்பகவல்லியின் அற்புத ரூபலாவண்யம் படைத்தவள் அல்ல. ஆனாலும் அவள் கண்கள்...! நெஞ்சில் ஆர்வக்கனலை எழுப்பி நினைவழித்தன ஒரு ஜோடி நேத்திரங்கள். கருணை சுரக்கும் அவளது கண்களில் அயர்வு தேங்கி நின்றதல்லவா? அன்பும் அனுதாபமும் அவன் உள்ளத்தில் ஊற்றெடுத்தன. கனவு மிதந்து கனிதுளும்பும் விரிந்த நயனங்கள் மதுரையான் கோவில் அரிவாளை ஒத்த புருவங்கள். இவை இரண்டு அவளுக்கு ஆகர்ஷணம் ஈந்தன. ஒயிலாகத் தலையைத் தாங்கிக் கொண்டிருந்தாள். கற்களின் மீதும், முட்களின் மீதும் நடந்து நொந்து கஞ்ச மலர்ப்பாதங்கள் இரத்தம் கசியாதா? ஏககாலத்தில் இரக்கமும், இன்பமும் அவன் உணர்வுகளில் குமிழியிட்டன. அவ்வளவு இரைச்சல் ஆர்ப்பாட்டத்திற்கும் அவள் அசைந்து கொடுக்கவில்லை. தோஷமற்ற நிர்க்குணப் பிரம்மனைப்போல் தனித்துத் துயின்றாள். வீரர்களில் ஒருவன் அவள் மேஜையின்மீது ரம்மியக் குறைவாக ஓங்கித்தட்டினான். திடுக்கிட்டு எழுந்து திரும்பிப்பார்த்தாள் வனிதை.

"நாங்கள் சினிமாவிற்குப் போகப்போகிறோம். நீ வருகிறாயா?" என்று வினவினான் அவ்வீரன் உணர்ச்சியற்ற காரியக் குரலில்.

'இல்லை! எனக்கு அலுப்பாக இருக்கிறது. நான் இன்னும் சற்று நேரம் கழித்து நமது காரியாலயத்திற்கு திரும்பி விடுகிறேன்" என்று பதில் தந்தாள் பதுமை போன்ற அந்த பாவை.

'தனியாகக் கிளம்பி பாஸிஸ பூதம் யாரிடமாவது அகப்பட்டுக் கொண்டு விடாதே!" என்று எச்சரித்துச் சென்றனர் அவர்கள். சுந்தரத்தை சிறிதும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

3

அந்த அறையில் தன்னந்தனியாக இருவரும் எதிரும் புதிருமாய் வீற்றிருந்தனர். இரண்டு டம்ளர் பழரஸம்

கொணரும்படி 'ஸெர்வரிடம்' சொன்னான் சுந்தரம். இரண்டு டம்ளரையும் சுந்தரத்தின் முன்பே கொண்டு வைத்தான் 'ஸெர்வர்! 'அங்கு ஒன்று'' என்று அந்த மங்கையின் மேஜையைச் சுட்டிக்காட்டினான் சுந்தரம், ஒரு தினுசாக முறைத்துப் பார்த்தாள் லீனா.

"என் சுவாதீனத்தை மன்னிக்கக் கோருகிறேன். தாங்கள் எதுவுமே அருந்தவில்லையே! நான் நேசக் கட்சியைச் சேர்ந்தவன் தான்." தனக்குத் தெரிந்த சொற்ப இத்தாலியப் பாஷையில் இழுத்து இழுத்து விண்ணப்பித்துக் கொண்டான் சுந்தரம்.

இத்தாலியச் சொற்களை அவன் உச்சரித்த நூதன முறை லீனாவுக்கு சிரிப்பு மூட்டியது. இதழ்க்கோடியில் இளநகை அரும்பிற்று. "ரொம்பவும் வந்தனம்! தங்கள் அன்பின் அறிகுறியை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் நேசக் கட்சி வீரர் என்பதை அப்பொழுதே உணர்ந்துகொண்டோம். இல்லாவிடில் இந்தத் துப்பாக்கி உங்களை இரையாக்கித் தன் பசியை-ஏன்? பழியைத் தீர்த்துக்கொண்டிருக்கும்' என்று உடைந்த-உருக்குலைந்த - தமிழில் பதிலிறுத்தாள். சுந்தரம் ஆச்சரியத்தால் மலைப்பெய்தி விட்டான். தூரதூர தேசத்தில் – கடல் கடந்த ஐரோப்பா கண்டத்தில்-சுந்தரத் தமிழ் செவியில் தேன் பாய்ச்சியது. மகிழ்ச்சியின் முத்துக்கள் 'பொலபொல'வென்று உதிர்ந்து கன்னங்களை நனைத்தன.

"ஏன் இப்படி சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர்கள்?" பரிவுடன் விசாரித்தாள் அந்த வீரநாரீமணி.

கனிவும் கவலையும் கலந்த அந்தக் குரல் வன வனாந்தரமான பிரதேசங்களில், குமுறும் கடல்களில், கொட்டும் மழையில் நான்கு ஆண்டுகளாக ஏகாதிபத்தியப் போரில் பங்கெடுத்துக்கொண்டு பாடுபடும் சுந்தரத்தின் சோர்ந்த இதயத்திற்கு தெய்வீகமான ஊற்றத்தைத் தந்தது.

தன் தாய்நாட்டில் ஒரு ஆனந்தக் குடியரசை சமைவுறுத்த துன்பங்களைத் தழுவும் இந்த வீரப் பெண்மணியின் முன் வெட்கித் தலை குனியவேண்டியவன் அல்லவா தான்? வெற்றிகோடி கண்டால் என்ன? விக்டோரியா பதக்கங்கள் பெற்றால் என்ன? லட்சியமற்ற போர் வாழ்வு! அன்னையின் தளையைப் போக்க அடிமையின் சுமையை நீக்க-ஏதாவது பயன்படுமா தன் யுத்த முயற்சிகள்?

ஒவ்வொரு சொல்லாலும் சுந்தரத்தின் சிந்தனையைக் கிளறிவிட்டாள் அந்த இத்தாலியப் பெண். ஐந்தே நிமிஷங்கள் அவளுடன் அளவளாவுதல் யுகாந்திரமான மாறுதலுக்கு அடிகோலிவிடும்

"தாங்கள் என் தாய்மொழியில் பேசியது வியப்பை விளைவித்தது. வேறொன்றுமில்லை," என்று நிறுத்தினான் சுந்தரம்.

"ஓ! அதுவா? ஐந்தாறு மாதங்களுக்கு முன் வட இத்தாலியில் ஜெர்மன் காவற்கூடம் ஒன்றில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழ் நாட்டு வீரர்கள் இருவர் வெகு நாள் முயற்சி செய்து தப்பித்து வெளிவந்துவிட்டனர். எங்கள் சகாக்கள் சிலருடன் அவர்கள் இருவரும் சேர நேர்ந்தது. பாஸிஸ விரோதியின் எல்லையைக் கடந்து நேசப்பிராந்தியத்துக்குள் நுழையுமுன்னர் இரண்டு மாத காலம் எங்களுடன் தங்கினர். அந்த அறுபது நாட்களில் எவ்வளவோ திடீர்த் தாக்குதல்களில் எங்களுக்குப் பக்கபலமாகப் பின் தொடர்ந்தனர். அசகாய சூரர்கள்! சாவைச் சிரித்துச் செல்லும் வஜ்ர நெஞ்சம் வாய்த்தவர்கள். ஆனால் அவ்வளவு வீரமும் பாலைவனத்தில் பெய்த மழையைப் போல் பலனற்ற வைராக்கியம் தானே! விழலுக்கு இறைத்த நீராக விரயமாகும் ஜீவ வன்மை. ஒருதரம் ஜெர்மன் இயந்திர பீரங்கி ஒன்று எங்களிடம் மாட்டிக்கொண்டது. அதை எப்படி இயக்குவதென்று அவர்கள்தான் எங்களுக்குப்பயிற்சி அளித்தனர்.'

கற்பகவல்லியின் இசைமொழி அல்ல. மாதுர்யம் காம்பீர்யமாக மாறிவிட்ட தொனி. இருந்தாலும் துக்கத்தாலும், தேசியத் தியாக நெருப்பாலும், மன உளைச்சல்களாலும் அவதிப்படும் பெண்மையின் பரிபூர்ணத்தாபம் எதிரொலித்த குரல்.

இருவரும் கிளம்பினர். நதி தீரத்தில் ஜன சஞ்சாரமே காணோம். ஏகாந்தமாக இருவரும் பேசிக்கொண்டே போயினர்.

அந்த இரு வீரர்களைப்பற்றியே வழி நெடுகிலும் புகழ்ந்தாதி பாடிக்கொண்டு வந்தாள் லீனா. சுந்தரத்திற்குப் பொறுமையே உண்டாகிவிட்டது எனலாம். தங்கள் தொண்டர் சேனை சாதித்துள்ள சாகசச் செயல்களை விவரிக்கையில் அவள் கண்களில் ஒளி பிறந்தது. கவல் முறுக்கை நரம்புகளில் ஏற்றின அவளது சொற்கள். அந்த சமயம் அவள் முகத்தை ஆர்வத்தின் தொடர்பில் ஜனிக்கும் ஒரு புத்தழகு போர்த்து விழிகளில் விகஸித்தது.

இரண்டரை வருஷங்களாக நாடோடி வாழ்க்கை. அதிலும் கடந்த மூன்று மாதங்களாக ஓய்ச்சல் ஒழிவில்லாத அலைச்சல் வெல்வாதர் குன்றில் இத்தாலிய கவர்ன்மெண்டின் துருப்புகளும், அவளது 'யூனிட்'டைச் சேர்ந்த கொரில்லாப் படைக்கும் கைகலந்துவிட்டதாம். மின்னல் வேகத்தில் காட்டாற்று வெள்ளம் போல ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஆக்கிரமித்து முன்னேறிக்கொண்டிருந்த பலம் பொருந்திய சர்வாதிகார சேனையின் முன் நியாயத்தைத் தவிர, வேறெந்த கவசமும், வீரத்தைவிட வேறெந்த விஞ்ஞான சாதனமும் பெற்றிராத ஒரு பிடி அமரர்கள் என்னத்தைப் புரட்டிவிட முடியும்? அவள் ஒரு அங்கத்தினளான யூனிட்டின் தலைவர் சண்டையில் குண்டுபட்டு மாண்டார். ஏறக்குறைய எல்லோருமே எதிரியின் ராக்ஷஸ பலத்துக்கு இரையாகி விட்டனராம். அப்பொழுது அவர்கள் பிளாரன்ஸ் நகரத்தில் தங்கியிருந்தனராம், அந்தரங்க சுரங்க வழியில் காரியாலயம் நிறுவிக் கொண்டு பிளாரன்ஸின் பொது மக்களில் பெரும்பான்மையோர் அவர்களுடைய அனுதாபிகளாம். நான்கைந்து நாட்கள் ஓய்வெடுத்துக் கொள்வதாக உத்தேசம். அதற்குள் நேச நாடுகளிடமிருந்தும் ஒற்றர்கள் மூலம் மேற்கொண்டு என்ன செய்வது என்று குறிப்பு கிடைக்கும், நேர்முகமாகத் தகவலைத் தெரிவித்து வரச் சென்றிருந்த தூதுவர்கள் இத்தாலிய எல்லை பூராவும் பதுங்கிக் கிடந்த நாஜிய கெஸ்டாபோக்களின் கையில் சிக்கிச் சித்திரவதைக்கு ஆளாகாவிடில் - ஆனால் பிறந்த பொன்னாட்டின் சேவையில் ஈடுபடுபவர்கள் உடல், பொருள், ஆவி, சகலத்தையும் உவப்புடன் சமர்ப்பணம் செய்ய சித்தமாயிருக்க வேண்டியதுதானே!

(தொடரும்)

மனஸ்தாபம் வேண்டாம்!

'விதூஷகன்'

★

"இங்கே பாருங்கோ, மாமி! இப்போ சொல்றதைக் கடைசித் தடவைன்னு வச்சுக்குங்கோ! இன்னமே ஒருதரம் சொல்லணும் என்கிறதே வேண்டாம்! உடனே 'போர்ஷ'னைக் காலி செய்து கொடுத்துட்டு மறு காரியம் பாருங்கோ! ஆமாம் சொல்லிப்பிட்டேன்! அப்புறம் 'சாரதா பொல்லாதவள்! என்கிற கெட்ட பெயர் எனக்கு வேண்டாம்! என்று 'அவள்' சக்கைப்போடு போட்டுக்கொண்டிருந்த போதுதான் ஆபீஸிலிருந்து வந்து உள்ளே நுழைந்தேன்.

ராமசாமி அய்யருடைய தர்மபத்தினி ஸ்ரீமதி சிவகாமு அம்மாள் தொண்டையைப் பலமாகக் கனைத்துத் தயார் செய்துகொண்டாள். பெரு மழைக்கு அறிகுறியாக இடி இடிப்பதை நினைவூட்டியது அந்தக் கனைப்பு! எதிர் பார்த்ததைப் போலவே சிவகாமு அம்மாள் தொடர்ந்து சத்தம் போடக் கிளம்பிவிட்டாள்! 'ஏண்டி! போ, போன்னு விரட்டியடிச்சா எங்கே தொலையறது? பட்டணம் முன்னைப் பட்டணமாவா இருக்கு இப்போ? கையகலம் இடம் கிடைக்கிறது குதிரைக் கொம்பா இருக்கு! 'அவா'ளும் பேசாமெ இருக்கல்லே! முடிஞ்ச மட்டும் வேறே இடம் பார்த்துண்டுதான் இருக்கா! அதுக்குள்ளே அவசரப்படுத்தின முடியுமோடி?'' என்று சரமாரியாக கையில் பிடித்திருந்த பால் கரண்டியை வீசி வீசி ஆட்டிக் கொண்டே ஏக தடபுடலாகப் பேசினாள்.

சென்ற இரண்டு மாதகாலமாகவே இந்த ரகளை எனக்கு சகஜமான அனுபவமாகிவிட்டது!

ராமசாமி அய்யர் என்னுடைய 'ஸப்டெனன்ட்' மனுஷ்யன். ரொம்பத் தங்கமான குணசாலி. ஆனால் அவருடைய 'மனுஷி'யின் குணம் மட்டும் கொஞ்சம் கோளாறு! போதாக் குறைக்கு ஆசார அனுஷ்டானங்களில் அபாரப் பற்றுடையவள்! ஆகவே அவள் குணம் "ஏற்கனவே குரங்கு; இந்த லக்ஷணத்தில் தேள் வேறு கொட்டியதாம்" என்ற கதையாக விருந்தது!

ராமசாமி அய்யர் என்னுடன் ஒண்டுக் குடித்தனம் வந்து இரண்டு வருஷகாலம் ஆகிறது. இதற்குள் நாங்கள் (அதாவது புருஷர்கள்!) உயிருக்குயிராகப் பழகிவிட்டோம்! ஏன்? சாரதாவும் அந்த அம்மாளும்கூட தாயாரும் பெண்ணும் போல ஒற்றுமையாய் இருக்கவில்லையா என்ன? என்னவோ சென்ற இரண்டுமாத காலத்திற்குள் அவர்களுக்குள் திடீரென்று மனத்தாங்கல் ஏற்பட்டு வளர்ந்துவிட்டது! காரணம்? வேறு என்னவாக இருக்க முடியும்? குழாய் ஜலத்துக்குச் சண்டை போட்டிருப்பார்கள்! முற்றத்தில் காயும் வெய்யிலுக்குச் சண்டை போட்டிருப்பார்கள்! "சிவகாமு அம்மாள் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளுவது கிடையாது! ஆசாரம் சோரம் எல்லாம் பெயரளவிலேதான்!" என்று சாரதா அடிக்கடி புகார் செய்ய ஆரம்பித்தாள். "சாரதாவிற்கு ஆசாரம் போதவே போதாது...வெடுக்கென்று பேசி விடுகிறாள்," என்று அபிப்பிராயப்பட்டாள் சிவகாமு அம்மாள். வாஸ்தவம்தான். சாரதா சுடச்சுட பதில் கொடுக்கும் சுபாவமுடையவள்தான்! அதற்காக என்னைப்போல எல்லோருமே பொறுத்துப் போவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

முதலிலெல்லாம் இவர்களுடைய சண்டையை நானும், ராமசாமி அய்யரும் காது கொடுத்துக் கேட்பதில்லை. அவர்கள் சொல்லும் புகார்களை நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்று தெரிந்தால், நிலைமை முற்றிவிடப் போகிறதே என்ற பயம்தான் இதற்குக் காரணம். ஆனால் எத்தனை நாட்களுக்கு இப்படியே இருக்க முடியும்?

ஒருநாள் ராமசாமி அய்யரிடம் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தேன். நான் எதிர் பார்த்தது போல அவர் மூர்ச்சைபோட்டு விழவோ அல்லது கல்லாகச் சமைந்துபோகவோ இல்லை. வெகு சாதாரணமாகச் சிரித்தார். "அப்படித்தான் ஸார் இருக்கும்! இப்போ சண்டை போடுவா! இன்னும் கொஞ்ச நாழிக்கெல்லாம் கட்டிப்புரளுவா! இந்தப் பொம்மனாட்டிகளே ரொம்ப 'அன்ஸ்டெடி'ன்னா! நாம் இதையெல்லாம் காதிலே போட்டுக்கப்படாது!" என்று தட்டிக் கழித்தாற்போலப் பேசிவிட்டார்! அதற்குமேல் வற்புறுத்த என் மனம் இடந்தரவில்லை. என்னதான் இருந்தாலும் இரண்டு வருஷகாலமாக ஒன்றாகக் குடியிருக்கிறவர்கள்.

ஆனால் ராமசாமி அய்யர் சொன்னதுபோல கொஞ்ச நாழி கழித்து இரண்டுபேரும் 'கட்டிப்புரள'வில்லை! 'கர் பர்' என்று கடுவன் பூனை மாதிரி சீறினார்கள். ஒருவரைப்பார்த்து மற்றவர் மூஞ்சியைச் சுளித்துக்கொண்டார்கள்! கன்னத்தைத் தோளில் இடித்துக்கொண்டார்கள்! இன்னும் பல விதமான வக்ர சேஷ்டைகளால் தங்கள் வெறுப்பை பரஸ்பரம் பரிமாறிக்கொண்டார்கள்! "சனியன்கள்! எப்படியாவது தொலைந்து போகட்டும்!" என்று முணுமுணுத்துக்கொண்டே ஆபீஸுக்குத் தொலைந்து போனோம் நாங்கள்.

அன்று சாயந்திரம் வீடு திரும்பியபோது நிலைமையில் யாதொரு அபிவிருத்தியையும் காணோம். சாரதா 'உர்'ரென்று மூஞ்சியைத் தூக்கிக்கொண்டிருந்தாள்! பச்சைத் தண்ணீராகக் குளிர்ந்து போயிருந்த ஒரு கப் காபியை மேஜைமேல் 'டக்'கென்று வைத்து

விட்டு, 'டக் டக்' கென்று நடந்து சமையலறைக்குள் அடைக்கலம் புகுந்துகொண்டாள்.

"ஏன்? இன்றைக்கு 'ஐஸ்காபி'யா?" என்றேன் உள்ளே பார்த்துக்கொண்டு.

"இல்லை! இல்லை! எல்லாம் 'ஹாட் காபி'தான்! தாங்கள்தான் கொஞ்சம் 'லேட்'. அதனாலே காபி குளிர்ந்துபோயிருக்கலாம்!" என்று சூடாக பதில் கொடுத்தாள் உள்ளேயிருந்தபடி.

"சரி! சரி! இதை எடுத்துக்கொண்டுபோய் நீயே குடி. உடனே வந்து எடுத்துக்கொண்டு போ. பக்கத்திலே இது இருக்கிறதே உடம்பெல்லாம் குளிருகிறது!" என்று கோபமும், ஹாஸ்யமும் கலந்து வீசிவிட்டு வெளியே போகப்புறப்பட்டேன்!

"எங்கே? ஹோட்டலுக்கா? எல்லா ஹோட்டலிலேயும் காப்பிக்கு ஜீனி இல்லையாம்! வெல்லம்தான் போடுருளும்!" என்று ஒரு வெடிகுண்டை வீசினாள்! நான் பின்வாங்கினேன்! மனதை சமாதானப்படுத்திக்கொண்டு மேஜைமேலிருந்த காபியை ஒரு தினுசாக உள்ளே செலுத்தினேன்.

"சாரதா! குடியிருப்பவர்களிடம் சண்டையென்றால் அதற்காக எனக்கு எதற்காக இந்த தண்டனையெல்லாம்?" என்றுமெல்ல அவள் கோபத்துக்குக் காரணத்தைஅறிய அவள் வாயைக் கிளறினேன். அவ்வளவுதான்! கண்களில் 'பொல பொல' வென்று கண்ணீர் உதிர அவள் விம்மிக்கொண்டே ஆரம்பித்து விட்டாள். 'முதலில் இவர்களை வேறு இடம்பார்த்தண்டுபோகச் சொல்லுங்கோன்னா! பொழுது பொழுதாக அந்த அம்மாளுடைய உபத்திரவம் என்னால் சகிக்கமுடியல்லே!" என்றாள்.

'அசடு! இதற்காகவா இப்படி அழுகிறாய்? பாவம்! அவரும் எங்கையெல்லமோ பார்த்துக்கொண்டுதானிருக்கிறார்! கிடைத்தால்தானே? இன்னும் கொஞ்சநாளைக்கு 'அட்ஜஸ்ட்' செய்துண்டு இரு!" என்று அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, "அந்த அம்மாள் எங்கே காணோம்? கண்ணில் தென்படவில்லையே!" என்றேன்.

"எங்கே போகிறாள் எல்லாம்? உள்ளே படுத்துண்டிருக்காள். என்னமோ தலைவலியாம்! மத்தியானத்திலேயிருந்து 'ஐ ஊ'ன்னு சத்தம் போட்டுண்டு கிடக்கா!" என்று சொல்லிவிட்டு கண்களைத் துடைத்தபடி உள்ளே போனாள்.

"அப்பாடா!" என்று ஒரு பெருமூச்சுடன் வாசல் பக்கம் வந்தேன். திண்ணையில் ராமசாமி அய்யர் அப்பு ஜோஸியரிடம் தன் ஜாதகத்தைக் காண்பித்துக்கொண்டிருந்தார்.

"ஜாதகரீதியாக எனக்கு ஏதாவது கிருஹமாற்றம் இருக்கா, ஜோஸ்யரே?" என்று அவர் கேட்டது என் காதுகளில் விழுந்தது. அப்பு ஜோஸியர் உடனே ஒன்பது கிரகங்களையும் மாற்றி மாற்றி விரல்விட்டு எண்ணினார். எப்படியெல்லாமோ திருப்பித் திருப்பி எண்ணிப்பார்த்தும் ஒன்பது கிரகங்களே வந்ததினாலோ என்னவோ, 'கிருஹமாற்றமே கிடையாது!" என்று ஆணித்தரமாகச் சொல்லிவிட்டுக் கீழே இறங்கினார். 'ராமசாமி அய்யர் முகத்திலும், என் முகத்திலும் ஏககாலத்தில் ஏமாற்றம் பிரதிபலித்தது.

அடுத்த இரண்டு நாட்களுக்குள் சிவகாமு அம்மாளுக்கு உடம்பு ஜாஸ்தியாகிவிட்டது. இரவில் தூக்கமில்லாமல் தவித்தாள். ராமசாமி அய்யர், பாவம், ஒண்டியாகக் கஷ்டப்பட்டுத் தானும் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு சிவகாமு அம்மாளுக்கும் கஞ்சிவைத்து ஒரு 'பிளாஸ்க்'கிலே கொட்டி வைத்துவிட்டு ஆபீஸ்போய் வந்துகொண்டிருந்தார். இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் வழக்கம் போலவே அவருக்கு லீவு கிடைக்கவில்லை. இரண்டு வருஷமாக அவருடன் பழகிய தோஷம் என் மனதை என்னவோ வேதனை செய்தது! சாரதாவும் நிலைகொள்ளாமல் தவித்தாள்! அவள் மனதிலும் ஏதோ வேலை செய்துகொண்டிருந்தது. மூன்றும் நாள் சாரதா தானாகவே என்னிடம் வந்து, "ஏன்னா! அந்தப்பிராமணன் தனியாகக்கஷ்டப்படுகிறாரே! பக்கத்திலே நாம் இருந்துகொண்டு இப்படி விட்டேத்தியாகஇருக்கலாமா? அவரையும் உங்களுடன் சாப்பிடச்சொல்லுங்கள்!' என்றாள்.

ராமசாமி அய்யரும் நானும் சாப்பிட்டுவிட்டு எழுந்தோம். சாரதா கொஞ்சம் ரகஸ்யமாகவும் ராமசாமி அய்யர் காதிலே விழும்படியாக இறைந்தும் "இன்றைக்கு நானே கஞ்சி போட்டுத் தந்துடறேன்! அவர் ஆபீஸ்போகட்டும்!" என்றாள்.

அன்று கொஞ்சம் சீக்கிரமாகவே ஆபீஸிலிருந்து வீடு திரும்பினேன். வீடு நிசப்தமாக இருந்தது. சட்டையைக் கழற்றி, கோட்ஸ்டாண்டிலே மாட்டிக்கொண்டிருக்கையில் உள்ளேயிருந்து சாரதாவும், சிவகாமு அம்மாளும் பேசிக்கொண்டிருந்தது காதிலே விழுந்தது.

"அடி, சாரு! தெரியத்தனமாக உன்னிடம் கடுமையாக நடந்து

கொண்டேனடி! உன் தங்கமான குணத்தை அறியாமே அப்படி இப்படின்னு பேசிப்பிட்டேன்! என்னை மன்னிச்சுடு!" என்று சிவகாமு அம்மாள் ஈனஸ்வரத்தில் முனகிக்கொண்டு சொன்னாள். சிவகாமு அம்மாளா இப்படி வீணைத் தந்தி இழைவதுபோலப் பேசுகிறாள்? என் காதுகள் 'ரிப்பேர்' ஆகிவிட்டனவா? பேரிடி முழக்கம்போன்ற அவருடைய அட்டகாசமான குரல் எங்கே?

அடுத்தாற்போல சாரதாவின் விம்மலும், பொருமலும் புயல்காற்றுப்போலச் சீறிக்கொண்டு எழுந்தன. 'மாமி! என்று உச்சஸ்தாயியில் அலறிவிட்டாள் அவள். "மகாலக்ஷ்மிமாதிரி நீங்கள் உங்காத்திலே இருக்கிறபோது இப்படி அசட்டுப்பிசட்டென்று நடந்துகொண்டது என் பேரில்தான் தப்பு! என்னை விட்டுட்டு நீங்கள் வேறே குடி போகக்கூடாது மாமி?" என்று 'ஹோ' வென்று அழுதாள்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டே வந்த ராமசாமி அய்யர் தம்மை மறந்து அப்படியே ஸ்தம்பித்து நின்றார்! அவர் கண்களின் ஓரங்களில் நீர் துளித்தது. நான் 'பொத்'தென்று ஈஸிச்சேரில் சாய்ந்தேன்.

"அப்பு ஜோஸியரின் வாக்கு பலிக்காமலா போயிடும்?" என்று வியந்து கொண்டார் ராமசாமி அய்யர். எங்கள் பேச்சுக் குரலைக் கேட்டு சாரதா அறையைவிட்டு வெளியே வந்தாள்.

"சாரதா! 'காபி கீபி' ஏதாவது உண்டா?" என்றேன்.

'இன்றைக்கு ஒரு நாளைக்கு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்! நான் மாமியுடன் இருந்துவிட்டேன். இத்தனை நேரமும்!" என்று பதில் வந்தது.

"ஹோட்டலில் வெல்லம் போடுறான்னு சொன்னையே?" என்று திருப்பினேன். அவள் அதையெல்லாம் பசியவில்லை.

"பரவாயில்லே! இந்தாருங்கள். இதைக் கையிலே எடுத்துண்டு போய் காபியில் போட்டுச் சாப்பிடுங்கோ!" என்று சொல்லிக்கொண்டே ஒரு சிறிய சர்க்கரைப் பொட்டணத்தை என் முன்னால் வைத்துவிட்டு சிவகாமு அம்மாளைக் கவனிக்கச் சென்றாள்.

"பார்த்தீரா, ஸ்வாமி! இந்தப் பொம்மனாட்டிகளே ரொம்ப 'அன்ஸ்டெடி'ன்னு சொன்னேனே! இப்போ சரியாய்ப் போச்சா?" என்று முத்தாய்ப்பு வைத்தார் ராமசாமி அய்யர்.

"எது சரியாய்ப்போனாலும் சரி! சரியாய்ப் போகாவிட்டாலும் சரி, இந்த வீட்டு நெருக்கடி காலத்திலே சரியானபடி வீடு கிடைக்கவிட்டேங்கறது! பொம்மனாட்டிகள் தங்களுடைய மனதைப் பற்றிய மனஸ்தாபங்களை யெல்லாம் சரியானபடி தீர்த்துக் கட்டிக்கொண்டு, எல்லாவற்றையும் சரிப்படுத்தினால் எல்லாம் சரிதான்னா!" என்று ஒரே 'சரி' மயமாகப் போட்டுவிட்டு, சர்க்கரைப் பொட்டணத்துடன் காபி ஹோட்டலைப் பார்க்க நடையைக் கட்டினேன்.

மனைவி:—(ரேடியோவைச் சுட்டிக் காட்டி) ஆஹா, என்னபாவம் பாகவதர் கல்லும் கரையும்படியாக அல்லவா பாடுகிறார்!

கணவன்:—அப்படியானால், நான் இதை சமயலறையில் வைக்கிறேன். சாதமெல்லாம் ஒரே கல்லு. பல் உடைகிறது.



சர்வதேச மாணவர்கள் தென் கிழக்கு ஆசியப்பகுதி மகாநாடு சென்ற வாரம் டாக்டர் ஜாக்கிர் ஹுஸேன் தலைமையில் நடந்தது.

திருவல்லிக்கேணி தேசிய உயர்தரப் பெண் பாடசாலை தமிழ் வித்வான் சி. வே. லக்ஷ்மணனுக்கும், (கனல்) குருமணி ஸ்ரீ வி. பாலசுப்பிரமண்ய ஐயரின் பெண் சௌ. ஜெயலக்ஷ்மிக்கும் சமீபத்தில் லால்குடிக் கருகிலுள்ள இடையாத்துமங்கலத்தில் விவாஹம் நடைபெற்றது.



'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஔவையார் கூறியிருப்பது, நெடுங்காலமாகச் சிறுவர்களுக்கெல்லாம் மனப் பாடமாகிவிட்டது. ஆனால், இந்தப் பாடம் சிறுவர்களுக்கு அவசியமா? பொதுவாக, ஔவைப் பிராட்டி காட்டும் அறநெறி, வயது முதிர்ந்தவர்களுக்குத்தான் உரியது. அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த மகனே, மகளோ இந்த விதியை அனுஷ்டித்துத் தங்களைக் காட்டிலும் முதிர்ந்த பருவத்திலிருக்கும் பெற்றோரைக் கௌரவித்து, ஒழுகவேண்டியது அவசியமே இப்படி ஔவையாரின் சட்டம் இருக்கிறதென்று சொல்லித் தந்தையோ, தாயோ குழந்தையைப் பார்த்து, 'நான் உனக்குத் தெய்வம்! நான் சொல்லுகிறதுதான் வேதவாக்கு; அப்படியேதான் தெய்வப் புலமை வாய்ந்த ஔவையாரும் சொல்லுகிறார். நீ அப்படியே நடந்துகொள்ளவேண்டும் இல்லாவிட்டால் தண்டிப்பேன்' என்று பயமுறுத்துவது ஒரு பெருங் கொடுமையாகும். பெற்றோர், தங்களால் முடியுமானால், தங்களைக் குழந்தை தெய்வமாக மதிக்கும்படி ஒழுகிக் காட்டலாம். அப்படியானால், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற பிரசாரம் தேவையில்லையே?

உள்ளத்தைப் புண்படுத்தாதே!

ஆனால், பேராசிரியர் பெர்னார்ட் ஷா (Bernard Shaw) சொல்லுகிறபடி, தாய் தந்தையர் தங்கள் வாழ்க்கையைக் குழந்தைக்கு முன்மாதிரியாகச் செய்து கொள்வதற்கு மாறாகப் பெரும்பாலும் 'எச்சரிக்கை' யாகவே செய்து கொள்கிறார்கள். இத்தகைய தாய் தந்தையர், 'துஷ்டத்தனம் செய்யாதே' என்று குழந்தைகளைக் கண்டிப்பது எப்படி நியாயமாகும்?

தவறான முறையும் கொள்கைகளும்

★

இயற்கை வழியில் செல்லும் ஆரோக்கியமுள்ள குழந்தைகள் உத்ஸாகம் மேலிட்டுச் செய்வது எப்படித் துடுக்கு அல்லது துஷ்டத்தனமாகும்? சில பெற்றோர் குழந்தையை நோக்கி, 'நீ அப்படிச் செய்தால் சுவாமி உன்னிடம் பிரியமாய் இருப்பார்; இப்படிச் செய்தால் சுவாமி கோபித்துக் கொள்வார்! அல்லது பூச்சாண்டி பிடித்துக்கொண்டு போவான்!' என்றெல்லாம் பயமுறுத்துவதும் உண்டு. குழந்தையை அடித்துப் பயமுறுத்தும் கொடுமையைக் காட்டிலும் இப்படிக் குழந்தையின் உள்ளத்தையே புண்படுத்த முயலும் கொடுமை அதி பயங்கரமானது.

செங்கிஸ்கானும் ஆஷாடபூதியும்

சிலர், குழந்தை தவறு செய்கிறதென்று அவமானப்படுத்துவதுமுண்டு. 'வெட்கங்கெட்ட மாடே! சுரணைகெட்ட கழுதையே! அட மூதேவி!' என்றெல்லாம் ஏசுவதுண்டு. இதுவும் சரீரக் கொடுமையைக் காட்டிலும் குழந்தையின் மனச் சாட்சியைத் துன்புறுத்துகிறது. இப்படிச் செய்கிறவர்கள், 'எல்லாம் குழந்தையின் நன்மைக்காகத்தான்!' என்று சொல்லிக்கொள்வார்கள். இந்த மனநிலையில் கொடுமையோடு ஆஷாடபூதித்தனமும் கலந்திருக்கிறது. இவர்கள் செங்கிஸ்கானும் ஆஷாடபூதியும் கலந்த பிரகிருதிகள்! குழந்தையின் ஆத்மாவைக் குருடாக்கவோ, முடமாக்கவோ முயல்வதோடு தங்கள் ஆத்மாவுக்கும் கேடு சூழ்கிறார்கள் என்று பெர்னார்ட்ஷா (Bernard Shaw) கூறுகிறார், தமது தனிப்பெருங் கிண்டல்-நடையிலே.

சிற்றடியும், தரும-முலாம் பூசுவதும

சீன தேசத்தில் பெண்குழந்தைகளின் பாதங்களைக் குறுக்கிச் சின்னஞ்சிறு சிங்கார அடிகளாகச் செய்யும் வழக்கம் இருந்தது. பெண்களுக்குச் சிற்றிடை அழகு என்பதுபோல், சீனர்கள் சிற்றடி-அழகும் பெண்களுக்கு அவசியம் என்று கருதினர். எனினும் இது கொடுமைதான்; உடம்பிற்குச் செய்த கொடுமை. 'சிற்றடிச் சீனத்தை நோக்கி நகையாடுகிறவர்களோ, குழந்தையின் சூட்சும உடலை முடமாக்கப் பின் வாங்குவதில்லையே!' என்கிறார் பெர்னார்ட்ஷா.

'அதைச் செய்யாதே! அப்படிச் செய்தால், தோலை உரித்து விடுவேன்!' என்று சொல்லுகிறவர்கள் கொஞ்சம் தற்சோதனை செய்து கொள்ளவேண்டியது அவசியம். அப்படிச் செய்து பார்க்கிறவர்களும், 'நான்தான் பிழைசெய்து கெட்டுப் போனேன்; என் பிள்ளை ஏன் குட்டிச் சுவராய்ப் போகவேண்டும்?' என்று தங்கள் கொடுமைக்குத் தரும-முலாம் பூசக்கூடும். 'நான் சொல்லுகிறபடி செய், செய்கிறதைச் செய்யாதே!' என்ற உபதேச முறை எப்போதும் தவறானதே; குழந்தை-உலகத்திலோ ஆபத்தான கல்வி முறை. மதுபானம் செய்கிற பெற்றோர் சிறுவர் சிறுமிகள் அந்த வழக்கத்தைக் கைக்கொள்ளலாகாது என்று எச்சரிக்கை செய்வது போலவும், மதுவிலக்குப் பிரசாரகர் இடையிடையே மது அருந்தித் தம்மை உத்ஸாகப்படுத்திக்கொண்டு தொண்டாற்றுவது போலவும்தான்!

குழந்தைக்குள் சிருஷ்டி-அற்புதம்

நம்முடைய இஷ்டப்படியெல்லாம் குழந்தையை உருவாக்கிவிடலாம் என்று முயல்வது குழந்தைக்குள்ளிருக்கும் உயிர்ச் சக்தியை, சிருஷ்டி-தத்துவத்தை, அதன் இஷ்டப்படி பரிசீலனை செய்து பார்க்க இடங்கொடாமல் இடையூறு விளைப்பதேயாகும். தன் உயிர்ச்சக்தி அங்குமிங்கும் செலுத்துவதை உணர்ந்துதான் அதன் இஷ்டப்படி குழந்தை நடந்துகொள்ளுகிறது. அந்தச் சிருஷ்டி-தத்துவத்தை, குழந்தை-ஆத்மாவை, நன்கு உணர்ந்துகொண்டு குழந்தையின் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதென்பது இயலாத காரியம்.

ஒரு குழந்தையை அதன் உள்ளிருக்கும் ஜீவசக்தி, சூட்சும சிருஷ்டி-தத்துவம், விஞ்ஞானியாக்க முயலும். வேறொரு குழந்தையின் இயற்கைச் சக்தி; இசைஞானியாக்க முயலும்; அல்லது கவிஞனாக்க முயலும். இன்னொரு குழந்தை, செயல்-திறமையுள்ள ஒரு கர்மயோகியாகக்கூடும்; நிர்வாகத் திறமையுள்ள ஒரு நிபுணனாகக்கூடும். அந்த அந்தப் போக்கில் அப்படி அப்படிச் சூழ் நிலைகள் அமைத்துக் கொடுப்பதுதான் குழந்தைக்கலையின் காரியம்.

உயிர்த் தத்துவம், உள்ளுணர்ச்சியாகிய சிருஷ்டி—தத்துவம், அபாரமாகவேலை செய்தால், பெற்றோர்களின் கட்டுப்பாடுகளையும் மீறிக் குழந்தையை ஒரு நெப்போலியன் அல்லது ஷெல்லி அல்லது காந்தி ஆக்கக்கூடும். இது அபூர்வமான நிகழ்ச்சி. பெரும்பாலும் சாதாரணக் குழந்தைகள் பெற்றோரின் அடக்கு முறைகளாலும் ஆசிரியர்களின் கொடுமைகளாலும், ஆஷாடபூதிகளாகக் கூடும்; 'செங்கிஸ்கான்' ஆக முடியாவிட்டாலும், கெட்டுப் போகின்றன என்றுதானே சொல்ல வேண்டும்!

ஒரு சிறுவன் கவிதை இயற்றிப் பாடிக்கொண்டிருந்தானாம் 'அந்தத் தொழிலில் வருமானம் கிடையாதே!' என்று கவலைப்பட்ட அருமைத் தந்தையார் பிரம்பைத் தாராளமாகப் பிரயோகித்துப் பையனைத் திருத்திவிட முயன்றார். பையன் அழுது துடித்துக் கொண்டே,

இரக்கம் கொள்வாய் என் அப்பா.
இனி நான் கவிதை செய்யேனே!

என்று பாட்டிலேயே பதில் சொன்னானாம். இந்தச் சிறுவன் பின்னாளில் கவிப்புலவனாகவே விளங்கினான் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனால் பல குழந்தைகளுக்கும் இந்த அடக்குமுறை இயற்கை ஆற்றலை, சிருஷ்டி-சக்தியை மலர்ச்சிபெற முடியாமல் அடக்கி ஒடுக்கி அழித்து விடும்.

கவி ஸரோஜினி தேவி இளமையிலேயே கவிபாடத் தொடங்கிவிட்டார். தந்தையார் இவரை விஞ்ஞானியாகவோ, கணித சாஸ்திரியாகவோ செய்துவிட வேண்டுமென்று அரும்பாடு பட்டாராம்; அடக்கு முறைகளையும் கையாண்டு பார்த்தாராம். ஆனால், கவித்வ சக்தி அடங்கிப்போகவில்லையென்பது பிரசித்தம். எல்லாக் குழந்தைகளும் ஸரோஜினி போலவும், ரவீந்திரநாத டாகூர் போலவும் அடக்குமுறைகளை மீறித் தங்கள் இயற்கையான சிருஷ்டி-அற்புதத்தை வெளியிட்டுவிட முடியாது.

குழந்தையின் ராஜ உரிமை

ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் சூட்சும சக்திக்கு இணங்கத் தன்னைப் படைத்துக்கொள்ளும் உரிமையுண்டு; தன்னை மனிதனாக்கிக்கொள்ளும் உரிமையுண்டு. இந்த உரிமையைப் பறித்துவிடுவது அனர்த்தம் விளைவிக்கும். பெற்றோர்கள் நாஸ்திகராயிருக்கலாம்; குழந்தைக்கு ருத்திராட்சமும் கழுத்துமாகச் சிவப்பழமாய்ப் பரிணமிப்பதற்கு உரிமையுண்டு. பெற்றோர் பரம பக்தர்களாக இருக்கலாம்; குழந்தைக்கு எந்தக் கொள்கையையும் தழுவக்கூடிய சுய நிர்ணயம் அளிக்கப்பட வேண்டும்.

சில குழந்தைகளுக்குச் சிலரைப் பிடிக்காமலிருக்கலாம். அண்ணன் அதிரடிக்காரனாய் இருந்தால், தங்கைக்கு அண்ணன் மீது வெறுப்பு ஏற்படக்கூடும். சில குழந்தைகளுக்கு அலட்சிய புத்தியுள்ள அம்மானையோ அத்தையையோ பிடிக்காமல் இருக்கலாம்; மிகவும் கண்டிப்பான தந்தை மீதும் வெறுப்பு விளையக்கூடும். தாயை பிடிக்காத சேயும் இருக்கக்கூடும் என்றால், அதிகம் சொல்வானேன்? இப்படியெல்லாம் வெறுப்பு விருப்பங்களை வெளியிடும் உரிமையும் குழந்தைக்கு உண்டு.

ஒவ்வொரு குழந்தையும் தன் வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொள்ள வேண்டியது

மாமியார்:—"ஏண்டி? கோகிலாம்பா! வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஒரு பாட்டு சொல்லப்படாதோ?"

மாட்டுப்பெண்:—"சா......நீ......
சா......நீ......நீ......சா... ...நீ...
சா..............சா...............நீ...
சா...................................."

தான். இது குழந்தைகளின் ராஜ உரிமை. முதியவர்களுக்கு மூடத்தனமாகத் தோன்றலாம்; எனினும் முதியவர்களைப் போல் தங்கள் போக்கில் போய் வளர்ச்சி பெறக்கூடிய உரிமை, அனுபவம் பெற வேண்டிய உரிமை, குழந்தைகளுக்கும் உண்டு என்று ஆசிரியர் பெர்னார்ட் ஷா கூறுகிறார். இதனால், டாக்டர் மாண்டிஸோரியின் அபிப்பிராயங்கள் உலகப் பேரறிஞர்களை வசீகரித்திருக்கிறது என்று தெரிகிறதல்லவா?

ஸ்தூல-சூட்சும ஆரோக்கியம்

குழந்தைகளை அதட்டியும், அடித்தும், பயமுறுத்தியும், அவமானப்படுத்தியும் அவற்றின் உரிமைகளைப் பறித்துக்கொள்வது குழந்தை-உலகத்தைப் பாழாக்குவதோடு, முதியவர்களின் மனச்சாட்சியையும் பாழாக்கிவிடுகிறது. குழந்தை, இயற்கையாகவே மிகவும் சுறுசுறுப்பாய் இருக்கிறது; சத்தம் போடுகிறது; மேலும் மேலும் விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறது; சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. வயிற்றுப் பசிபோல் குழந்தைக்கு அறிவுப் பசியும் அதிகம்தான். இத்தகைய குழந்தையை நோக்கி, 'சும்மா இருந்து சுகம் பெறுவாயாக!'

"பாபு, ஒங்கப்பா தர்ப்பணத்துக்கு நாழியாயிடுத்து. ஓடிப் போய் ஓரு எள்ளு வாங்கிண்டு வா......!"

என்று உபதேசித்தால் அது எப்படிப் பொருந்தும்? அதட்டினால், அடித்தால் அது எப்படி நியாயமாகும்?

தாயுமானவரும் தம்மால் அப்படியிருக்க முடியவில்லையே என்று கையை விரிக்கும்படியாக இருக்கும். அந்த யோக நிலையைக் குழந்தை எப்படி அடைய முடியும்? குழந்தையின் உரிமை அப்படிச் சுறுசுறுப்பாக இருப்பது, ஆடுவது, ஓடுவது, விளையாடுவது, சத்தம்போடுவது... அந்த உரிமையைப்பறிக்கும் கொடுமை சுயநலமானது இயற்கைக்கு மாறானது; குழந்தையின் ஸ்தூல ஆரோக்கியத்தையும், சூட்சும ஆரோக்கியத்தையும் ஒருங்கே கெடுக்கக் கூடியது.

கொடுமை கொடுமைதான்!

குழந்தை விஷயத்தில் அலட்சியமாயிருப்பது பிசகு என்றால், கொடுமை இழைப்பது மகாபாதகம் என்றுதான் சொல்ல வேண்டும். 'வீட்டில் இருந்தால் தொந்தரவு செய்கிறதே!' என்று குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவைக்கும் மனநிலை, கொடியவர்களைச் சிறையிலிடும் மனநிலை போலவே தோன்றுகிறது. ஆனால் இங்கே கொடியவர்கள் முதியவர்களே! இக்கொடுமையைத் 'தியாகபுத்தி' என்று எண்ணிக்கொண்டாலும், கொடுமை கொடுமைதான்!

இவர்கள் குழந்தைகளோடு மிதமிஞ்சிக்கொஞ்சிக் குலாவுவதும் உண்டு. ஆனால் அந்தச் சமயத்திற்குப்பின் குழந்தைகளை வேலைக்காரர் வசமாகவோ, மற்றவர்களின் வசமாகவோ ஒப்புவிக்கத்தான் செய்வார்கள். இப்படி அலட்சியமோ, கொடுமையோதான் குழந்தைகளின் விஷயமாகக் கையாளப்படுகிறது. இம்முறை சிறந்த குழந்தைக் கலைஞர்களின் கொள்கைகளுக்கு முற்றும் முரண்படுவதாகும்.



வீட்டுப் பஞ்சத்தைச் சமாளிக்க புதிய அலுமினியம் வீடுகள். இதில் ஸ்னான அறை, சமையல் அறை முதலிய வசதிகள் உண்டு. இடத்தைத்தேடி அங்கு 2 மணி நேரத்தில் இதை அமைத்துவிடலாம்.



வரகூர் வேங்கடதாஸன்

57

'கண்டேன்'

ராஜகிருகத்து அந்தப்புர மாளிகையில், அப்போது தீவிர ஆரவாரத்துடன் பெரும் பரபரப்பும் காணப்பட்டது. அந்தி மாலைக்கு அழகு செய்தாற்போல தீபாலங்காரங்கள் செய்யப் பெற்றன—அரண்மனையெங்கும் தீபங்கள் வில்லிட்டன; மாடங்கள்—உப்பரிகைகள்—கோபுரங்கள் எங்கும் மணிவிளக்குகள் ஒளிவீசிய வண்ணம்—அகன்ற—இருண்ட வானத்தை எள்ளி நகையாடின.

அரண்மனையின் எல்லாப் பகுதிகளைக் காட்டிலும், அந்தப்புர மாடம் மிகவும் சோபையுடன் விளங்கியது; தீப வரிசைகளால் அலங்கரிக்கப்பெற்றது மட்டுமல்ல — மகர தோரணங்களால் அழகு செய்யப்பெற்றது; அந்தப்புர மாடத்தின் நாலு புறமும் அணி மகர தோரணங்கள்-அவற்றை விளக்கிக்காட்ட மணிவிளக்குகள்—மணமலர் மாலைகள் பார்க்குமிடமெல்லாம் அழகுபெற அணி செய்யப்பெற்று விளங்கின. மின்னற்கொடிகளென இளநங்கையர் பலர் மங்களம் பாடி அகிற்புகை வளர்த்தார்கள். அதன் மணத்தை மந்தமாருதம் பல யோசனைகள் பரவச் செய்தது. பனிநீருடன் கலந்த பொதியத்துச் சந்தனத்தை நாலுபுறமும் வாரித் தெளித்த வண்ணம், பல்லவ மகிபனுக்கு வாழ்த்துக் கூறினார்கள் இளநகைக் குமரியர் சிலர். அந்தப்புரத்தின் வாயிலிலிருந்து உள்ளிடமெங்கும் வர்ண விசித்திரமும் மனம் கவர்தரும் மணமும் நிறைந்த மலர்களைப் பரப்பிக்கொண்டிருந்தார்கள் மடந்தையர் பலர்.

அந்தப்புரத்தின் உள்ளிடத்தேயும் விதவிதமான அலங்காரங்களை, மிகுந்த குதூகலத்துடன் செய்துகொண்டிருந்தார்கள் மகளிர்கள். யாழும் வீணையும் எடுத்து, சித்திரக் கட்டில்களில் அமர்ந்து, இன்னரம்பு தெறித்து, காந்தருவ மார்க்கத்துப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள் இசைவல்ல மங்கையர்கள்; அவர்களை அடுத்தாற்போல் சிறிய அரங்கத்திலே, யாழும் குழலும் ஒருங்கே ஒலித்து நிற்க, தண்ணுமை ததும்ப, இரு பூவையர் தேசிகக் கூத்தாடி, கண்டப் பாடல்களால் யாவரையும் வசீகரித்தார்கள்.

சித்திரப் படிமங்கள்போல் ஆங்காங்கே அமர்ந்து, இன்னிசைப் பாடல்களை, யாழுடன் பாடியும், குதூகலத்துடன் கிளிச் சொற்களால் சின்மொழிகள் பயின்றும், குறுமுறுவலுடன் சிறு நகையாடியும் பொழுது போக்கினார்கள், தளிர்மேனிக் கொடிப் பெண்கள்—பாதச் சிலம்புகள் 'சின்மொழி' எழுப்ப, இடைமேகலைகள் இன்னொலி, முரல, வளையல்களும் மாலைகளும் மயங்கி ஒலிக்க—ஓசிந்த நடையுடனும், செவ்வரி சிதறிய கரு விழிகளால் ஒருவரை ஒருவர் மருட்டும் விழிகளுடனும், நடை பயில்பவர்போல், அரவப் பூந்துகில் மின்னனார் நடந்து சென்றார்கள்.

அப்போது, ஒரு சிலர், ஆடையாபரணங்கள் வைத்த பொற்றட்டுக்களையும், பொற்பெட்டகங்களையும், அஷ்டமங்கலப் பொருள்களையும் தளிர்க்கரங்களில் தாங்கியவண்ணம் வரிசையாக அந்தப்புர மாடத்துக்குள் நடந்து சென்றார்கள்.

ஆடையாபரணங்களை ஏந்திச் சென்ற மகளிர் நேராக மாடத்துக்குள் புகுந்து, கங்க கன்னிகையான—ராஜகுமாரி — பூஸுந்தரி இருக்கும் இடத்தை அடைந்தார்கள்.

பூந்துகிலால் திரை போடப் பெற்ற வாயில் மாடத்தில் நின்று கொண்டு, "தேவி!...தேவி!!..." என்று அழைத்தார்கள்.

சரேலென்று திரைத் தள்ளிவிட்டு வெளிவந்தாள் சித்ரமுகி. பேடி—சித்ரமுகியேதான் அவள்; ஆடையாபரணப் பெட்டகங்களை ஏந்தி நிற்கும் மகளிரைக் கண்டு அவள் சற்று வியப்புடன் நின்றாள்.

"என்ன?...இந்தச் சீர்—சிறப்புக்கள் யாருக்கு?..." என்று கேட்டாள்.

"சித்ரமுகி,......என்ன கேள்வி இது?...வேந்தரின் செவிகளுக்கு

உன் வார்த்தைகள் சென்றால் என்ன நேரும் தெரியுமா?...நீயும் ராஜகுமாரியின் வார்த்தைகளில்..." என்றாள் பரிவார மங்கையரில் ஒருத்தி.

அப்போது சீறியெழுந்த படநாகம் போல், உள்ளிருந்து அலங்கோலமாக வெளிவந்தாள் பூஸுந்தரி. அவள்மேனி தீயால் துவண்ட கொடிபோல் காணப்பட்டது. எனினும் கொடி மின்னல்போல் ஒளிவீசியது அவள் மேனியில்.

"யார் நீங்கள்?...'ராஜகுமாரியின் வார்த்தைகளில்' என்ன?...வந்த காரியத்தைச் செய்துவிட்டுத் திரும்புங்கள்!......வீண் பேச்சுப் பேசாதீர்கள்!...உங்கள் வேந்தரின் பிரதாபம் யான் அறியாததல்ல!...விரைவில்!..." என்ற சுடு சொற்களைக் கொவ்வைக் கனியிதழ்களிலிருந்து வெளிப்படுத்தினாள் பூஸுந்தரி.

"தேவி!...மன்னித்தருள வேண்டும் எல்லா அறிந்த தாங்கள் எங்கள் மீது கோபம் அடைவது தகுதியல்ல. ஏழைப் பெண்களான நாங்கள் வேந்தரின் 'கட்டளைப்படி நடந்தோம். நாங்கள் வேறு குற்றம் செய்யவில்லையே!...தயைபுரிந்து எங்களை உங்களுடையவர்களாக மதிக்க வேண்டுகிறோம்;..." என்று பரிவார மங்கையரில் தலைவி கூறினாள்.

அவள் வார்த்தைகள் பூஸுந்தரியின் இருண்ட உள்ளத்திலே ஊடுருவின. சித்ரமுகியைப் பார்த்தாள். சித்ரமுகி பூஸுந்தரியைப் பார்த்தாள்.

"ஆனால், இப்போது வந்த காரியம் என்ன?" என்று கேட்டுக்கொண்டே உள்ளிருந்து கங்காதேவியும் முன் வந்தாள்.

"தேவி!...வேந்தர் இந்தச் சீர்களை, தங்கள் ஸமுகத்துக்கு அனுப்பி வைத்தார்கள்."—என்றாள் பரிவாரத் தலைவி.

"ஹா!...வேந்தருக்கே இவற்றை நாங்கள் அளித்ததாகக் கொண்டு போய்க் கொடுங்கள்;..." என்றாள் கங்காதேவி.

"தேவி, நாங்கள் அவமதிக்கப் படுகிறோம்:......இன்று வேந்தர் வெற்றி பெற்ற திருநாள்!...இவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்; இன்று நம் நகரில் குதூகலமான வெற்றி விழா கொண்டாடப் பெறுகின்றது: தங்கள் வாசஸ்தலமான இம்மாடத்தில் எவ்வளவு குதூகலமும் சிறப்பும் பாருங்கள்!...எல்லாம் தங்களைக் கருதியே அல்லவா?...இந்தச் சீர்களை வெறுப்பது வீரலக்ஷ்மியை அவமதிப்பதுபோல் ஆகிவிடும்!..."

"என்ன சாதுர்யம்?...இவ்வாறு பேசும்படி உங்களுக்கு வேந்தரே கட்டளையிட்டிருக்கிறார் போலும்!....அல்லவா?....நல்லது! வெற்றிவிழா—வேந்தர் இருக்குமிடத்தில்தான்; அதனால் நாங்கள் கடமைப்பட்டிருப்பது எதுவுமில்லை—அடிமையாகச் சிறைப்பட்டிருக்கும் நாங்கள் இவற்றை எதற்காக விரும்ப வேண்டும்!...இந்த மாடத்தில் எவ்வளவு குதூகலம் இருந்தால் என்ன?......யாருக்கு இங்கு களியாட்டமெல்லாம்?...நாகரிகமற்ற—வெறிகொண்ட வேந்தன் உங்கள் தலைவன்!...நாங்கள் யாருக்கும்—எதற்கும் கடமைப்பட்டவரல்ல!......போய்விடுங்கள்—" என்றாள் கங்காதேவி

"சித்ரமுகி,......பேசாமல் நிற்கிறாயே!...வேந்தருக்குக் கோபத்தை வளர்க்கும் வகையில் நாங்கள் திரும்புவதா?...நீயே சொல்லம்மா!..." என்றாள் பரிவாரத் தலைவி.

சித்ரமுகி பூஸுந்தரியின் செவிகளில் ஏதோ ரகஸ்யமாகக் கூறினாள். வியர்த்த நுதலைத் துடைத்துக் கொண்டவாறே பூஸுந்தரி பெருமூச்சுவிட்டாள்.

"நல்லது; அந்தத் தூண்களுக்கு அலங்காரமாக அவற்றை வைத்துவிட்டுப்போய்விடுங்கள்.' என்றாள் பூஸுந்தரி.

ஒருவாறு சமாதானம் அடைந்தவர்களாய், பரிவார மங்கையர் ஆடையாபரணங்களை வைத்தார்கள் தூண்களுக்கு அருகில். மணமலர்மாலைகள், ஆடையாபரணங்கள், கண்ணாடி, முதலிய அஷ்டமங்கள விசேஷங்கள் முதலியவற்றைத் தூண்களைச் சுற்றிலும் வைத்துவிட்டு, வணக்கம் கூறி விரைந்து சென்றார்கள் அம்மங்கையர்.

"அம்மா, இந்த அலங்கோலங்களைக் காணும்போது என் மனம் புண்ணாகின்றதே!...ஹா!...என்ன ஆரவாரம்! அதோ பாருங்கள்! ஆடல்!—பாடல்! வாத்திய கோஷங்கள்! என்ன சம்பிரமங்கள்!...இவையெல்லாம் என்னை ஒவ்வொரு கணமும் உயிர்தேயச் செய்கின்றனவே! ... போகும் உயிரை விரைவில் போகச் செய்யும் இவை!...இவற்றைக் கண்களால் கண்டு...அமைதியாக இவற்றினூடே யான் சீரழிவது எவ்வளவு நாட்களோ!...அடி,...சித்ரமுகி, உண்மையில் என் பிரபு தேவர் சிறைப்பட்டுவிட்டாரா?...நிச்சயம் உண்மையா?...' என்று கூறிக்கொண்டே பூஸுந்தரி விழிகளில் நீர் துளும்ப மாடத்தின் வெளியே ஓசிந்து நடந்தாள். சித்ரமுகியின் தோளில் கையை ஊன்றிக்கொண்டு, சுற்றுமுற்றும் நோக்கினாள் தேம்பிய உள்ளத்தோடு.

"தேவி!...எல்லாம் உண்மைதான்!...பொய்யன்று! பாண்டிய வேந்தர் சிறைப்பட்டதும் உண்மை!...இன்று வெற்றி விழா கொண்டாடப்படுவதும் உண்மை! பாண்டியப் படைகள் சிதறி ஓடிவிட்டன என்பது உண்மையே! பாண்டிய மன்னருடன் சேனாதிபதி மாறன் எயினன் என்பவரும் சிறைப்பட்டிருக்கிறாராம்—ஆனால் பல்லவவேந்தரின் ஜன்ம விரோதியான சித்திரமாயனும், தங்கள் ஸகோதரர்களும் அகப்படவில்லை—அவர்களைச் சிறை பிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அநிருத்தர் மேற்கொண்டிருக்கிறாராம்" என்றாள் சித்ரமுகி.

'என்னால் நம்பமுடியவில்லையே!.. அம்மா ... இந்த நிலை ஏன் ஏற்பட்டதோ? ....பெரும் பாதகம் விளைந்துவிட்டதே!' என்றாள் பூஸுந்தரி—கங்காதேவியை நோக்கி.

"நான் சொல்வதைக் கேட்பதுமில்லை!...வீண் கவலைகளும் ஏற்படுத்திக்கொள்கிறாய்!...ஏன் இந்த அல்லல்? வருவது வந்தே தீரும்! வல்லபனும், குணபரனும் உன்னை மறப்பவர்களா?...உன் நிலையை அறியாதவர்களா? ...பாண்டியன் சிறைப்பட்டதன் காரணம் விரைவில் புலனாகும்; செயலற்றவன் சிறைப்பட்டதுபோலவா இது? இல்லை—மகத்தான சேனைகளையுடைய பாண்டியன்—இப்படிச் சிறைப்படக் காரணம் என்ன?...சூழ்ச்சியில் அகப்பட்டுவிட்டானா? ...அல்லது..எப்படிச் சிறைப்பட்டானென்பது தெரியவில்லை: உண்மை வெளியாகும்வரையில் பொறுத்துப் பார்ப்போம்; உறுதிக்கு உறைவிடமான நீ இப்படி பயம் அடைவது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது;—" என்றாள் கங்காதேவி.

"அம்மா!...உண்மையில் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள்; தங்களைப்பற்றியே பலரும் பேசினார்கள்...நான் அறிந்தவரையில் பாண்டியவேந்தரைத்தான் தாங்கள் அடைவீர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்;..தேவி! நான் என்னவென்று சொல்வேன்!......இதுவரையில் நான் சொல்லாததற்காக மன்னியுங்கள்!...அவர்!..." என்று கண்கள் கலங்க நின்றாள் சித்ரமுகி—அவள் முகம் புதுப் பொலிவு பெற்று விளங்கியது.

சற்று வியப்புடன் பூஸுந்தரியும், கங்காதேவியும் சித்ரமுகியைப் பார்த்தார்கள்.

"அடி...என்னவென்றுசொல்!...ஏன் தயங்குகிறாய்?" என்று அவள் தோள்களை அசைத்துக் கேட்டாள் பரபரப்புடன்-பூஸுந்தரி.

"தேவி!...அவரை நான் மேல்மாடத்திலிருந்து கண்டேன்;—" "அவரைக் கண்டாயா?.....பாண்டிய வேந்தரையா?..." "ஆம்!...சிறைக்கோட்டம் போகுமுன் அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்த்தேன்;.....அம்மா!...நீங்கள் அவரை......எண்ணி எண்ணி மயங்குகின்றீர்களே—அப்படி அவரிடம் அதிசயம் என்னவோ என்று சந்தேகம் கொண்ட நான்—அவரைக் கண்டவுடன் வியர்த்து நிலை கலங்கினேன்—உண்மையில் அவரைச் சிறை செய்ய எப்படி முடிந்ததோ?......"

"ஹா!...நீ பார்க்கும் பாக்கியம் அடைந்தாய்!...என்னிடம் உள் அன்பு கொண்ட உனக்கு-இந்தப் பாக்கியம் கிடைத்தது தகுதியே தான்!...ஆனால் பாவியேன் இங்கே சீரழிந்து கிடக்கிறேனே!...எனக்கு உயிர் தேய்ந்துகொண்டிருக்கும் எனக்கு அவரைப் பார்க்க முடியுமா?...நெடுநாட்களுக்கு முன் கண்ட அதே வடிவம் இப்போதும் என் உள்ளத்தில் நிலைபெற்றிருக்கிறது!...ஆம்—அதே வடிவம் இதோ என் கண்களுக்கு முன் நின்று காட்சியளிக்கின்றது; ஆனால் இப்போது அந்த வடிவம்—எப்படியோ!...எவ்வளவு பேரழகு பெற்றுள்ளதோ!...அவரை அருகில் அடையப் பெற்றேன்—ஆனால்...அடிமைக்கு ஒப்பாக—தெய்வம் பெரும்பாதகம் புரிந்துவிட்டதே!—

சித்ரமுகி உன்னைக் கண்டு ஆறுதல்கொள்ள முடிகிறது;..." என்று பூஸுந்தரி பொருமிக் கூறினாள். அவள் கண்கள் தாரை தாரையாக நீர் கான்றன.

"தேவி!...என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை: ஆனால் நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும் உங்கள் விருப்பம் நிறைவேறும்—" என்றாள் சித்ரமுகி.

அவள் சொற்களைக் கேட்டு பூஸுந்தரி திடுக்கிட்டாள். "உன்



அலுமினியத்தால் செய்த இவ்வீட்டை எந்த இடத்துக்கும் கொண்டுபோய் வசதியாக வைத்து விடலாம். சமையலறையின் தோற்றமே மேற்படி படம். (வீட்டின் வெளித்தோற்றம் 34-ம் பக்கத்தில் தோன்றுகிறது).

மையில் என் விருப்பம் நீ அறிந்து கொண்டாயா?" "தேவி!...மெள்ளவே பேசுங்கள்!...வேந்தருக்கு உற்ற ஒற்றர்கள் சுற்றிக்கொண்டிருப்பார்கள்—கவலையில்லாமல் இருங்கள்—நான் இயன்ற உதவிகளைச் செய்கிறேன்."

"என் உயிர்—பூரித்துவிட்டது! நீ என் உயிர்த்துணை—" என்று சித்ரமுகியைத் தழுவிக்கொண்டாள் பூஸுந்தரி.

அதே தருணம், "ஜய விஜயீபவ! விஜயஸ்ரீ நந்திவர்ம பல்லவ மஹாராஜருக்கு ஜயவிஜயீபவ! சத்துரு துரந்தர மகாராஜருக்கு-" என்ற கோஷணை கேட்டது.

மகளிர் பரிவாரங்களுடன் நந்திவர்மன், சிவமாறன், ஹிரண்யவர்மர் முதலிய மூவரும் பூஸுந்தரி நின்ற இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

சட்டென்று சித்ரமுகி அகல நின்றுகொண்டாள். பூஸுந்தரியும் கங்காதேவியும் உள்ளே சென்று மஞ்சத்தில் அமர்ந்து கொண்டார்கள். அதைக் கண்டவாறே நந்திவர்மன் முதலியோர் புன்னகையுடன் சித்ரமுகியின் அருகில் வந்து நின்றார்கள். நந்திவர்மன் ஏறெடுத்த முகத்துடன் சித்ரமுகியை நோக்கினான்.

"பிரபு!...ஆக்ஞை!..." என்று தலை வணங்கி நின்றாள் சித்ரமுகி பதறறத்துடன்.

"கங்ககன்னிகை இப்போது தான்... உன்னை போனாள் அல்லவா?" என்றான்.

"ஆம்!..."

"எங்கள் வருகை... அவருக்கு வெறுப்பளிக்கின்றதா?"

"பிரபு!...தங்கள் வருகையைத் தெரிவிக்கின்றேன்..."

"ஹூம்—...தெரிவித்து வா..." என்றான் நந்திவர்மன். அவன் மனம் பொங்கியது. அங்கு விளங்கிய ஆதனங்களில் அவனும், சிவமாறப்பிரபு, ஹிரண்யவர்மர்—இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

"ஜயவிஜயீபவ!....ராஜாதிராஜ பல்லவ ராஜ்யாதிபதி விஜயஸ்ரீ நந்திவர்ம மஹிபாலருக்கு!...ஜயவிஜயீபவ பாண்டிய மகாலக்ஷ்மி—சத்துரு துரந்தர பல்லவ மஹிபாலருக்கு! என்ற ஜய கோஷங்களை மகளிர்கள் இரு புறமும் நின்று கூறினார்கள்.

(தொடரும்)

மணமகள்: சென்னை ரெவின்யு போர்டு லீகியர் குபரிண்டு ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி ஐயரின் குமாரி ஸ்ரீமதி மீனாக்ஷி—மணமகன்: ஸ்ரீ ராமச்சந்திரய்யர் குமாரன் ஸ்ரீ நடராஜன். விவாகம் சென்ற 5-ந்தேதி மயிலாப்பூரில் நடைபெற்றது.

அட்டைப் படம்

★

வீடுகளைச் சிங்காரமாக வைத்துக்கொள்வதற்குத் தனியாக ஒரு சிரத்தை வேண்டும். வாசல் மெழுகி அழகான கோலங்களைப் போடுவதால் வீட்டுக்கு லட்சுமிகடாக்ஷம் ஏற்படுமென்று நம்பும் சிறுமி தன் வீட்டுக்குக் கோலமிடும் காட்சி.

+



சென்னை ரிவின்யூ போர்டு ஆபீஸ் சூப்பிரண்டு A. கிருஷ்ணமூர்த்தி அய்யரின் குமாரியின் திருமணம் மயிலாப்பூரில் நடந்தபோது அத் திருமண வைபவத்தில் தமது அபார திறமையினால் பல மக்களை பரவசப்படுத்திய திருவாரூர் நாதஸ்வர வித்வான்கள் T. S. ராஜரத்தினம் பிரதர்ஸ் ஸ்ரீ S. கோவிந்தராஜு - தவில் ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண பிள்ளை - நாதஸ்வரம், ,, T. S. ராஜரத்தினம் பிள்ளை - நாதஸ்வரம் T.S. கோவிந்தராஜு பிள்ளை - தவில்.



விவாஹம்



ஹைதராபாத் Minister for Law and Justice ராஜாபஹதூர் எஸ். ஆராவமுத அய்யங்கார் அவர்களின் தௌஹித்திரியும் தென் இந்திய ரயில்வே டிப்டி சீப் ஆடிடர் ஸ்ரீ எஸ். கஸ்தூரிரங்காச்சாரியாரின் குமாரத்தியுமான சௌ. மைதிலிக்கும். சென்னை தபால், தந்தி இலாகா உதவி அகௌண்ட்ஸ் ஆபீஸர் ஸ்ரீ என். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களின் குமாரர் ஸ்ரீ ராமச்சந்திரன் B. A (Hons)க்கும் 16-5-47ல் விவாஹம் ஸ்ரீரங்கம் அம்மாமண்டபம் ரோட்டில் பெண்வீட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலையில் நடைபெற்ற வரவேற்பிற்கு பல உத்யோகஸ்தர்களும், பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

"ஜெயவாணி"

✶

அரசியல், சமுதாயம், இலக்கியக் கட்டுரைகள், சிறு கதைகள், தொடர்கதைகள், கருத்தை அள்ளும் ஓவியங்கள் மற்றும் பல சிறந்த அம்சங்கள் நிறைந்த

தமிழ் வாரப் பத்திரிகை
விலை அணா 4.

1-7-47 முதல் வெளிவருகிறது.
எங்கும் புதிய ஏஜண்டுகள் தேவை.

✶

தலைமை ஆபீஸ்:
"ஜெயவாணி"
41/42, சைட்ஹும்ஸ் ரோட்,
பெரியமெட், சென்னை 3.
கிளை ஆபீஸ்:
"ஜெயவாணி"
தக்கோலம், S. I. Ry.
(வழி) அரக்கோணம்.

குஷ்ட நிவாரணி

பரிக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது.

குஷ்டம் 18வகையும் செம்மேகப்பத்து, வெண்மேகம், கருமேகம், தடிப்பு அரிப்பு, மதமதப்பு, விஷக்கடிகள், குழிப் புண்கள் எல்லாம் 6-வேளையில் தீருகிறது
50 வேளை செட் ரூ. 10-0-0
வைத்திய பதி
R. M. நாராயணசாமி பிள்ளை,
தன்வந்தரி வைத்தியசாலை பழனி S I

நற்சாக்ஷி

மகா-ா-ஸ்ரீ வைத்தியர் அய்யா அவர்களுக்கு நமஸ்காரம் செய்து எழுதியது

எனக்குப் புடையன் பாம்பு வாலரள் குத்தி பார்த்துச் சகிக்கமுடியாதபடி 6,7 வருஷமாக சரீரம் பூராவும் செம்மேகப் பத்துகளும், வழுவழுப்பாகக் கருமேகப் பத்துகளும் ½,¾ அங்குலகனத்தில் தடிப்புகளும் இருந்தன. எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும் ஊசிகள் போட்டும் குணமாகாமல் மனவேதனைப் பட்டு தங்கள் வசம் வந்து தங்கள் மருந்தையும் சாப்பிடலாம் என அபிப்பிராயப்பட்டு வந்து தங்களின் மருந்து ½ மண்டலம் சாப்பிட, சூரியனைக் கண்ட பனிபோல் எனது நோய் பூராவும் தீர்ந்து சுகமாகிவிட்டது. இதற்குமேல் மருந்தில்லை என உண்மையாகவும் உறுதியாகவும் சொல்லுகிறேன்.

(ஒப்பம்) பெருமாள் சேர்வை
தணிச்சயம், கொண்டயம்பட்டி போஸ்ட்
சோளவந்தான் மார்க்கட்.

குமரன் நேஷனல் இண்டஸ்டிரீஸ்,

ஒடக்காடு, திருப்பூர்.

திருப்பூர் வீரத்தியாகி குமரன் ஞாபகார்த்தமாக ஆரம்பித்த எங்கள் தொழிற்சாலையில்

★

பெட்டிராட்டை, ராட்டைக்குரிய எல்லாவித சாமான்களும், தனித் தனியாகவோ அல்லது ஒருமித்தோ வேண்டுவனபோல் தயார் செய்து கொடுக்கப்படும்.

★

தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

நேரில் வந்து வேண்டுவன பெற்றுப்போகலாம்.

நூற்பு சங்கங்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் மிகவும் சலுகை காண்பிக்கப்படும்.

T. R. கிருஷ்ணசாமி.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

★

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,
"சுதேசமித்திரன்" ஆபீஸ்,
மவுண்ட்ரோட், மதராஸ்.

ஜாதகம்! ஆருடம்!!

இன்றே எழுதுங்கள்—பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும். மேன்மை வாய்ந்த நற்சாட்சிகள் உண்டு.

கட்டண விவரம்: 1 முதல் 3. உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

வீனஸ் அஸ்ட்ரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

சூதகத்தை நிறுத்தியது

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும நிறுத்தவல்லது. நிவை வீணாவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3. நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ 5. மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8. கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ 4. (வி. பி.க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)

Tollygungo :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1. ஹாரி & ஸன், 93, சைனாபஜார், மதராஸ், 2. ராகவன் & கோ, ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யூ & கோ, கொமுஞ்சேரி, திருவாங்கூர், 4. J. திராத் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி. 5. L. M. முகர்ஜி & ஸன்ஸ லிட். 107, தரம்டோலா தெரு, கல்கத்தா, 6. செவானந்த செதர் செட்டி கல் ஹால் 92, ஸீ தெரு, கொழும்பு. 708, லோயர் தெரு, பாடூலா (ஸிலோன)

புதிய சாஸ்திரிக முறை



உங்களுக்கு இளமையின் தெம்பும் ஜீவசக்தியும் குன்றியுள்ளதா? உடனே டாக்டர் ஏ. ஜி. வால் அவர்களிடம் ஆலோசனை பெறுங்கள். ஆண், பெண் இரு பாலரின் தீராத நோய்களையும் எளிதில் தீர்க்கும் நிபுணர். அவரது விடாமுயற்சியுடன் கூடிய ஆராய்ச்சியின் பயனாக அனுசரித்து வரும் "புதிய சாஸ்திரிக முறை" உங்களைப் புதிய மனிதராக்கும். உடனே கீழ்க்கண்ட விலாசத்தில் அவரிடம் ஆலோசனை பெறுங்கள். பம்பாய் ஆஸ்பத்திரி, 1/71, பிராட்வே, ஜி. டி. மதராஸ். 232, ஹார்ன்பி ரோட், பம்பாய் 1.

ஆலோசனை நேரம்:— காலை 9-மணி முதல் பகல் 12-மணி வரை. மாலை 4-மணி முதல் 7-மணி வரை. ஞாயிறு காலை 9-முதல் 12-மணி வரை மட்டும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

சக்தி ஆருடம்!

புகழ்பெற்ற சக்தி பால ஜோதிடரால் வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். ஸ்ரீ தோண்டோ லக்ஷ்மன் நாராயண் B. A, ஆடிட்டர் War and Supply பூனாவிலிருந்து எழுதுகிறார்:— "தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன. தாங்கள் சாஸ்திர அனுபவம் மெச்சத்தக்கது." 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருஷ பலன் ரூ. 5. சக்தி கவசம் ரூ. 7—8-0. வி. பி. பி. அணா 5.

ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

KALAPI INDUSTRIES, BOMBAY, 2.

Sole Agents: KALAPI STORES, BOMBAY, 2.

அனைவருக்கும் திருப்தி யளிக்கக்கூடிய எல்லாவிதமான

நவீன பட்டு & நூல் ஜவுளி ரகங்களுக்கு

மாருதி கிளாத் மார்ட்

ராஜவீதி :: கோயமுத்தூர்

Lovely long hair

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது. மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சி யளித்து கேசம் வளர உதவும்.

VIJAYA CHEMICAL & TOILET WORKS

21 & 22 Suriyanarayana Chetty St, Royapuram, Madras.

குளா இங்க் மேன்மைக்கு நான்கு காரணங்கள்

எஸ். விஸ்வநாதம் & கம்பெனி, 4, பந்தர் தெரு, மதராஸ்.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
குரு நானக்	0	5	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்யேகம்.

சுதேசமித்திரன் புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை.



மாதவிடாய்

நின்று விட்டதா? கவலை வேண்டாம்.

சாஸ்திரீக முறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்களிக்கும். தீங்கற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0. ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம்பெற்றது. தபால் செலவு அணு 12. ரோதகி கர்ப்பத்தடைக்கு சிறந்த தீங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5. தாற்காலிகம் ரூ. 2-8-0. தபால் செலவு அணு 12.

Kaviraj M. BHATTACHARYA (S. W.)
Kavya Vyakarantirta, Vishagacharya,
120/1/1, UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.

நாயிஞ

மிகச் சக்திவாய்ந்த ஹிமாலயன் கண் நிவாரணி. கண் நோய்கள் அனைத்தையும் குணமாக்கி 50ஆண்டு புகழ்பெற்றது.

டாக்டர் ஏ. சே ஷய்யா உபாத்யா கூறுகிறார்:- "பிரபல ஆங்கில கண் நிபுணர்களும் சொஸ்தப்படுத்த முடியாத நோய்களை நாயிஞ குணமாக்கியுள்ளது. நாயிஞ ஓர் அரிய வரப்பிரஸாதம்."

ஆர். ராமசாமி Esq. பெட்டியார்ட் ஆபீஸர், கொனபாபா பேட் கூறுவது: கண்களை ரக்ஷிக்கும் தேவதை போன்றது! இதன் பலன் அற்புதமானது.

$2\frac{1}{2}$ அவுன்ஸ் நிகரம்-கெட்டியான புட்டி விலை ரூ. 1-12-0 செலவு தனி. ஒரு புட்டி ஒரு வருஷத்துக்கு வரும்.

இன்றே ஆர்டர் செய்க:
NAINA Co.,
CHAMBA STATE PUNJAB.

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க

ஆனந்த குசுமாகர லேகியம் (Registered)

சாப்பிடுங்கள்

தாது விருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது
தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஔஷதம்

விலை ரூ. 2—8—0 :: விவரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால் (REGD)
189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டீடி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரூ. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணு 6. வி. பி சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.



வசந்தத்தின் வசீகரம்
நீரோடையின் குளுகுளுப்பு
மலர்களின் நறுமணம்
தென்றலின் மிருதுதன்மை
ஸ்வர்க்கத்தின் இன்பம்
இவைகளைத் தருவது

?

அமர்ஜோதி

அகர்வத்தி

★

விவரங்களுக்கு:
ஆஷா கம்பெனி
சௌகார்பேட்டை,
சென்னை 1.

கண்ணில் பூவிழுதல்

டிகாஸ்ஸ் க்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணு 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது பொதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

டாக்டர்
கே. வி. மாத்தியூ
அவர்களால்
ஆங்கிலத்தில் எழுதி
தமிழில் மொழி பெயர்த்த
புத்தகங்கள்

—★—

(1) மலடும் அதன் நிவாரணமும் ரூ. 3.

'ஆணிலும் பெண்ணிலும் மலடு ஏற்படும் காரணங்களை டாக்டர் மாத்யூ இப்புத்தகத்தில் விவரித்து, அவைகளை எவ்வகையில் நீக்கலாம்' என்று கூறுகிறார்.

—The Hindu.

(2) இளமை பெறும் முறை ரூ. 3.

ஆண், பெண்ணைப்பற்றி மிகவும் நுட்பமான விஷயங்களில் இதைச் சாதாரண தெளிவான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. விருத்தியாப்பியத்தினால் பீடிக்கப்படும் எல்லாருக்கும் இப்புத்தகம் அனுபவ பூர்வமான சமய சஞ்சீவியாயிருக்கிறது.

—Morning Star

(3) கருதரிப்பதை தடை செய்யும் விவரங்கள் ரூ. 2—8—0

தேவையானவர்களுக்கு அவசியமான இந்த முக்கிய விஷயத்தைப் புகட்ட இது ஒரு தைரியமான சந்தேகமற்ற முயற்சியாகும்.

—Mrs. Sarojini Naidu, Poona

★

ஹெல்த் புத்தகசாலை,
7/8, கிருஷ்ணன் கோயில் தெரு
ஜி. டி., மதராஸ்.
முன் பணம் அனுப்பினால் தபால் சார்ஜ் இனாம்.

KARNIK BROS' BOMBAY 4.

வாரியர்
பிருங்காமலகாதி
தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க
ஆயுர்வேத சாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936)

கஞ்ச் ஆயில்

(தந்தப்பொடி சேர்ந்தது)

வழுக்கை ஒழிந்து மயிர் நன்கு வளர உதவும். சகலவிதகேச நோய்களுக்கு சிறந்தது. ரூ. 2—8—0. தபாற் செலவு அணு 13.

விரை வாதம்

ஹர்னியா, வாதம், தடிப்பு யானைக்கால் முதலியவை குணமாக நிஷாகர் தைலம் என்று மேல் பூச்சு மருந்தையும் உள் மருந்து ஒன்றையும் சாப்பிடவும். உடனே பலன். ரூ. 5—8—0. தபாற் செலவு அணு 13.

ரிது தயினி

மாதவிடாய்க் கோளாறுகளைப் பற்றி கவலைவேண்டாம். எந்த நிலையிலும் குணம் அடைந்து வியாதி நீங்கும் சீக்கிரமாக வேலைசெய்யும். ஹானியற்றது. ரூ. 3. தபாற் செலவு அணு 13.

Bharathi Oushadalaya
126/2 Hazra Road,
Kalighat, Calcutta 26.

கணேஷ் காப்பிக்கொட்டை

சுவை, நயமணமுள்ளவை

கணேஷ் & கம்பெனி

பாண்டி பஜார், தி. நகர்.
பிராஞ்சு: சைனாபஜார், மதராஸ்.
பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி.

டெலிபோன் 2246 தந்தி: க்ளாவர் பீடி

லேட் கான்சாகிப் M. முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமது நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றன.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் க்ளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

கால்நடைகள் மடிவதை நிறுத்துங்கள்

லிவிங் ஆஸ்: வெக்கை நோய்க்கு கைகண்ட மருந்து,

கிளே கோஸால் அண்டு ஹூப் களிம்பு: கோமாரி கால் கசப்பு, வாய் கசப்புக்குச் சிறந்த மருந்து.

கெமோடோன்: கறவை மாடுகளுக்குப் பால் அதிகரிக்கவும், வியாதி வராமல் தடுத்து ரத்த விருத்தி, தேக வலிவு உண்டாக்கவும் அற்புத டானிக்.

மிருக வைத்தியர்களாலும், கவர்ன்மெண்டு பால் பண்ணைகளாலும் நன்கு மதிக்கப்பட்டுக் கையாளப்படுவது.

மற்றும் கால்நடைகள், குதிரை, நாய், கோழி, வாத்து முதலியவைகளின் பிளவைகள், ரணங்கள், சுளுக்குகள், வீக்கம் முதலிய எல்லாவித நோய்களுக்கும் தக்க மருந்துகள் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டு:-VEEFORE, 155, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஸ்டாக்கிஸ்டுகள்:

ஸ்ரீனிவாஸ் & கோ,
கும்பகோணம்.
கண்ணன் & கோ,
16, குட்ஷெட் தெரு, மதுரை.
கிருஷ்ணு மெடிகல்ஸ்,
தேனி, (மதுரை ஜில்லா.)
P. P. R. துளஸி ராமன் & கோ,
திலக்கோட்டை S. I.

S. K. S. கணேச நாடார்,
ரயில்வே பீடர் ரோட், சாத்தூர்,
(ராமநாதபுரம் ஜில்லா.)
M. M. சங்கரலிங்க நாடார் & ஸன்ஸ்,
சிவகாசி (ராமநாதபுரம் ஜில்லா).
லங்கா மார்க்கன்டைல் கார்ப்பொரேஷன், காரைக்குடி.

தயாரிப்பவர்:

கெமிகல்ஸ் & பார்மஸூடிகல்ஸ் கம்பெனி லிட்.,
லக்ஷ்மி ரோட், பூனா 2.

சாஸ்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தில் நீண்ட போக சக்தியையும் தரும். 40 நாள் மருந்து ரூபாய் 3-12-0. வி.பி. செலவு வேறு.

ஜமதக்னி ஒளஷதாலயா,
20, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.

ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியமேற்படுகிறது ... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோக்கியமுடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனாவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த, ஆன்டி-ஸெப்டிக்கும் குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை. ரெக்ஸோனாவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டு சேர்த்து, மலினங்களை அகற்றி சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சரும சுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனாவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்யமேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

ஆடவருக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனா பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப்பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் ஆன்டி-ஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினுலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப் பெருமையைக் கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனாவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவையவங்களை எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.



RP. 30-50 TM REXONA PROPRIETARY LIMITED

மீண்டும் யௌவனம்

வாழ்க்கையின் சிகரத்தில் இருக்கலாம்

ஒவ்வொருவருக்கும் முதுமை பருவமுண்டு. சிலருக்கு 30 அல்லது 40 வயதிலேயே இளம் பருவத் தவறுகளின் முதுமை அனுபவிக்கின்றனர். ஆண், பெண் இருபாலரும் முதுமையை ஒழித்து வாழ்க்கையை நன்கு அனுபவிப்பதற்கு சாஸ்திரீக முறையில் சிகிச்சை செய்ய வல்ல நிபுணர் இருக்கிறார். அவரிடம் உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் ஆலோசிக்கலாம். வீர்யமின்மை, பௌருஷமின்மை, நரம்புத்தளர்ச்சி, வெள்ளை, வெட்டை, வெண்குஷ்டம், மாதவிடாய்க் கோளாறுகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும்.

ஸ்திரீகளுக்கு (கோஷா) பிரத்தியேக வசதிகள்.

குறிப்பு: சிகிச்சைக்கு உத்தரவாதம் உண்டு. ரகசியமாய் வைத்துக்கொள்ளப்படும்.

ஆலோசனை நேரம்:
காலை 8-12 வரை; மாலை 4-8 வரை. ஞாயிறுகளில் காலை 8-12 வரை மட்டும்.

டாக்டர் நாரு
ஸரீர தத்வ நிபுணர்,
நாரு ஹாஸ்பிடல்,
24, பிராட்வே, சென்னை.
கடிதப்போக்குவரத்துகள் ரகசியமாக இருக்கும்.

Printed and published by S. Chakrapani Iyengar, at the Swadesamitran Power Press, 3 & 4 Whites Road, Mount Road, Madras. Editor C. R. Srinivasan B. A.

1994C

Regd No 2514: Swadesan

ஏராளமான

வியாபாரிகள்

உங்களுக்கும்
"உங்கள் மனிதரான"
தரகருக்கும்
சந்தோஷமளிக்க
இருக்கின்றனர்.

ஸுராஜ்மல்ஸ்

நேர்மையான வியாபாரத்தால்
முடிவில் பணம் செலுத்தும் உங்களுக்கு
சந்தோஷமளிக்கவிருக்கிறது.

"ஸ்தாபிதம் 1895"

313, எஸ்பிளனேட்,
மதராஸ்.

தரகரை விரட்டுக

ஐம்பது வருஷ நாணயமான சேவை.